114

# இலக்கிய வழிகாட்டி

T.S. உமாபதி M.A., L.T.,

114
3-54

REGISTRAR OF BOOKS
12 JUL 1954

TB
031,6(9)
M54
173445

MSC

சலம் & கம்பெனி
சட்டி தெரு, சென்னை-1.

# இலக்கிய வழிகாட்டி

(துணைப்பாட நூல்—உயர்நிலைப்பள்ளிக்குரியது)

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M.A., L.T., (Dip. in Geog.)

தலைமை ஆசிரியர்,

சி. அப்துல் ஹக்கிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,

சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JUL 1954
MADRAS

M. சேஷாசலம் அண்டு கம்பெனி

7, சுங்குராம செட்டித் தெரு, சென்னை-1

பதிப்புரிமை] 1954 [விலை அணா 14

முதற் பதிப்பு—நவம்பர், 1953
இரண்டாம் பதிப்பு—மே, 1954

சென்னை-600 008.
173425

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

Kabeer Printing Works, Madras (2521)

# முன்னுரை

'இலக்கிய வழிகாட்டி' என்னும் இச்சிறு நூல் நமது தமிழ் நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் உயர் படிவங்களிற் பயிலும் மாணவ மாணவியர்க்குத் துணைப்பாட நூலாகப் பயன்படும். ஆங்கில மொழியில் பரந்து கிடக்கும் இலக்கியங்களை இளைஞர்க்கு அறிமுகப்படுத்துவதற்கென எண்ணில் பல நூல்கள் அம்மொழியில் இலங்குகின்றன. தமிழ் மொழியில் உள்ள நம் பண்டைத் தமிழ் இலக்கியங்களை இளைஞர்க்கு அறிமுகப்படுத்தும் முறையில் இயற்றப்பட்ட நூல்கள் இல்லையென்னும் குறையை நீக்கிவைக்கும் நோக்கத்தோடு இஃது எழுகின்றது. இதனை அறிஞர் பெருமக்கள் உயர்நிலைப் பள்ளிகளில் துணைப்பாட நூலாக வைத்து மாணவ மாணவியர் இதன் நற்பயனை அடையுமாறு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை
29-11-1953

த. சே. உமாபதி

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பத்துப்பாட்டு— | | |
| | (1) சிறுபாண் ஆற்றுப்படை | ... | 1 |
| | (2) முல்லைப் பாட்டு | ... | 22 |
| 2. | எட்டுத்தொகை— | | |
| | (1) அகநானூறு | ... | 34 |
| | (2) புறநானூறு | ... | 55 |
| 3. | பதினெண் கீழ்க்கணக்கு— | | |
| | ஈரடியும் நாலடியும் | ... | 67 |
| 4. | ஐம்பெருங் காப்பியங்கள்— | | |
| | சீவகசிந்தாமணி | ... | 73 |

# இலக்கிய வழிகாட்டி

## 1. பத்துப்பாட்டு

### (1) சிறுபாண் ஆற்றுப்படை

**பத்துப் பாட்டு :**

நமது தமிழ்த்தாய், வளமிக்க மதுரையில் இருந்து செங்கோல் ஓச்சிய அந்நாளில், அவளுடைய அணிகலன்களாகத் திகழ்ந்தவை **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு** என்னும் நூல்களாம். அவற்றுள் பத்துப்பாட்டு என்னும் தொகை நூல், மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராய் இருந்த **நக்கீரனார்** முதலிய புலவர் எண்மரால் பாடப்பட்ட பத்து நூல்களைக் கொண்டு தொகுக்கப் பெற்றதாகும். திருமுருகாற்றுப் **படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்** என்னும் பத்து நூல்களும் பத்துப் பாட்டு என்னும் பேரால் வழங்குவன.

> "முருகு பொருநாறு பாண்இரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து."

என்ற செய்யுள், பத்துப் பாட்டின் பெயர்களைக் குறிக்க எழுந்ததாகும்.

**ஆற்றுப்படை :**

ஆற்றுப்படை யென்பதற்குப் பொருள் வழிச் செலுத்துதல் என்பதாகும். வறியவன் ஒருவன் ஒரு வள்ளலிடம் சென்று, அவன் ஈந்த வரிசைகளைப் பெற்று இன்புற்று வரும்போது, வழியில் வறுமை யால் வாடிய மற்றொருவனைக் கண்டு, அவனிடம் தான் சென்று பரிசில் பெற்று வந்த வள்ளலது இயல்பை யும், அவனிடம் செல்வதற்குரிய வழியையும் அறி வுறுத்தி, அவனை அவ்வள்ளல்பால் அனுப்புவதாக அமைத்து எழுதப்படும் நூலே ஆற்றுப்படை என்பது.

**ஆற்றுப்படையின் வகைகள் :**

அவ்வாற்றுப்படை பல வகைப்படும். ஒரு புலவர் மற்றொரு புலவரை வழிச் செலுத்துவது **'புலவராற்றுப்படை'** எனப்படும். இன்னிசை பாடும் பாணன், மற்றொரு பாணனை ஆற்றுப்படுத் துவது **பாணராற்றுப்படை** யெனப்படும். ஆடல் பாடல்களில் வல்ல கூத்தன் ஒருவன், மற்றொரு கூத் தனை ஆற்றுப்படுத்துவது **கூத்தராற்றுப்படை** யெனப்படும். ஆடுதலில் வல்ல விறலி, மற்றொரு விறலியை ஆற்றுப்படுத்துவது **விறலியாற்றுப் படை** யெனப்படும். அவ்வகைகளுள் பாணராற்றுப் படையைச் சேர்ந்தது சிறுபாண் ஆற்றுப்படை. பாணர்கள், பெரும்பாணர், சிறுபாணர் என இரு வகைப்படுவர். பெரிய யாழை இசைத்துப் பாடல் பாடு பவர் பெரும்பாணர். சிறிய யாழைக் கையேந்திச் சீர் மிக்க பாடல்களைப் பாடுபவர் சிறுபாணர்.

**சிறுபாண் ஆற்றுப் படை :**

சிறுபாணன் ஒருவன், மற்றெருரு சிறுபாணனே ஆற்றுப் படுத்துவதாக இது அமைந்துள்ளமையால் இப்பெயர் பெற்றது. இது பத்துப் பாட்டில் மூன்ருவ தாக அமைந்துள்ளது.

**பாட்டுடைத் தலைவன் :**

இந்நூல் வள்ளல் நல்லியக்கோடனைப் புகழ்ந்து, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனுர் என்ற புலவர் பாடியதாகும். நல்லியக்கோடன் ஓய்மான் நாட்டைச் சேர்ந்த ஒரு குறுநில மன்னன். அவ னது தலைநகராக விளங்கிய 'கிடங்கில்' என்பது திண்டிவனத்தைச் சேர்ந்த பகுதி யென்பது தெரிய வருகின்றது. இவன் வறியோர்க்கு வாழ்வளித்த சிறந்த வள்ளலாய் விளங்கினுன். இவன் காலத்தில் இவனைவிட மேம்பட்ட கொடையாளிகள் எவரும் தமிழகத்தில் இலர். இவன் பேகன் முதலிய கடை யெழு வள்ளல்களுக்குப் பிற்பட்ட காலத்தில் தோன் றியவன்.

**பாடிய புலவர் :**

இவனைப் பாடிய நத்தத்தனுர் என்ற புலவர் இடைக்கழி நாட்டைச் சேர்ந்தவர். இடைக்கழி நாடு என்பது சென்னைக்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ எழுபது மைல் தொலைவில் உள்ள ஒரு சிறு நாடு. இங்கு உள்ள நல்லூர் என்ற சிற்றூரைச் சேர்ந்தவர் இப்புலவர். இவர் தம்மை ஒரு பாணனுக நினைத்துக் கொண்டு, நல்லியக்கோடனின் இயல்புகளையும், பெருமையையும் மற்றெருரு பாணனுக்குச் சொல்வது போல இந்நூலில் விளக்குகின்ருர்.

வள்ளல் நல்லியக்கோடனிடம் சென்று, பரிசில் பெற்று மிகுந்த மகிழ்ச்சியோடு பாணன் ஒருவன் திரும்பி வருகின்றான். கதிரவன் தன் செந்நிறக் கதிர்களால் உலகை வருத்திக் கொண்டிருந்த நல்ல இளவேனிற் காலம் அது. அவன் வரும் பாதை நடப்பவருடைய பாதங்களைப் பருக்கைக் கற்கள் குத்திக் கிழிக்கும் வறண்ட காட்டுப் பாதை. அப்பாதையில் குளிர்ந்த நிழலைத் தரும் ஓர் ஆலமரம் இருந்தது. அம் மரத்தினடியில் வறுமையால் வாடிய சுற்றத்தவரோடு, சிறிய யாழைக் கையில் ஏந்திய பாணன் ஒருவன், துயரமே உருவாக அமர்ந்திருப்பதைப் பரிசில் பெற்றுச் செல்லும் பாணன் கண்டான். தன் இனத்தினர் வருந்துவதைக் காண அவன் உள்ளம் ஆற்றவில்லை. அவர்கள் அருகில் சென்று அவர்கள் பசிநோய் நீங்க, தான் கொண்டு வந்த பொருள்களிற் சிலவற்றைக் கொடுத்து, பின்பு தனக்குப் பரிசில் நல்கிய நல்லியக் கோடனை நாடிச் செல்லுமாறு அப்பாணனுக்குக் கூறினான். அவன் கூறியவற்றின் சுருக்கத்தைக் கீழே காணலாம் :

**முடியுடை மூவேந்தர் கொடையிற் சுருங்கிய தன்மை :**

செல்வத்திற் சிறந்தது எனப் புகழப்படுவது சேர நாடு. குளத்தில் உள்ள கயல் மீன்கள் அஞ்சியோடும்படி நீரில் இறங்கிச் செங்கழுநீர் பூவைத் தின்ற எருமையானது, மிளகுக்கொடி படர்ந்துள்ள பலாமரத்தினது நிழலில், காட்டு மல்லிகையாகிய படுக்கையில் படுத்து உறங்கும் வளம் மிக்கது அச் சேர நாடு. அந்நாட்டையாளுகின்ற சேர மன்னனுடைய வஞ்சி யென்னும் ஊர் தரும் பரிசிலும்

மிகச் சிறியதாயிருக்கும். இதனைப் புலவர் இயற்றிய அடிகளைப் படித்தறிந்து இன்புறலாம்.

"கொழுமீன் குறைய ஒதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்
மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறம் தைவர
விளையா இளங்கள்நாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலம் காவலர் மருமான் ஒன்னர்
வடபுல இமயத்து வாங்குவிற் பொறித்த
எழுவுறழ் திணிதோள் இயல்தேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே!"

[அரும்பதவுரை: குறைய - துண்டாகும்படி; ஒதுங்கி - நடந்து; வள் இதழ் - வளப்பமுள்ள இதழ்; கயவாய் - பெரிய வாயை உடைய; பைங்கறி - பசுமையான மிளகின் கொடி; விளையா - முற்றாத; இளங்கள் - புதிய தேன்; நாற - மணம் வீச; மெல்குபு - மென்று; குளவி - காட்டுமல்லி; மருமான் - குடியிலே உள்ளவன்; ஒன்னர் - பகைவர்.]

எழில் மிக்க மதுரையில் அமர்ந்து, பலர் புகழப் பாராளுகின்றான் பாண்டியன். அவனுக்கு உரிமை பொருந்திய கொற்கைத் துறைமுகம் மிக்க சிறப்புற்றதாகும். உப்பு வாணிகம் செய்யும் உப்பு வணிகருடைய வண்டியைப் பின் தொடர்ந்து வந்த மந்தி, அவ்வணிகர்களால் பிள்ளையைப் போன்று வளர்க்கப் படுகின்றது. அவ்வணிகருடைய புதல்வர்கள் முத்துக் களைக் கிளிஞ்சல்களின் உள்ளே வைத்து மூடி, அவற்றைக் கிலுகிலுப்பையாய்க்கொண்டு விளையாடும்போது, அக்குரங்கு தானும் அவ்வாறே கிலுகிலுப்பை செய்து விளையாடுகின்றது. அத்தகைய செல்வச் சிறப்பினையுடையது கொற்கை என்னும் துறைமுகம். அவ்வூருக்குத் தலைவனான பாண்டிய

னது தமிழ் வீற்றிருந்த தெருக்களையுடைய மதுரை என்னும் மூதூர் தருகின்ற பரிசிலும் மிகச் சிறியதே யாகும்.

“ நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
* * * * *
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே.”

[அரும்பதவுரை: நோன் பகடு - வலிய எருது; உமணர் - உப்பு வணிகர்; ஒழுகையொடு - வண்டி ஒழுங்கோடு; நகார் அன்ன - மகளிரின் பற்களை ஒத்த; நளிநீர் - செறிந்த நீர்; முத்தம் - முத்து; எருந்து - கிளிஞ்சல்; அடக்கி - மூடி; புறம் - பழிச்சொல்; நல்கூர் - வாடிய; நுசுப்பு - இடை; ஐம்பால் - கூந்தல்.]

பொன்கொழிக்கும் காவிரி பாயும் புகழ் மிக்க நன்னாடு சோழப் பெருநாடு. அந்நாடு நீர் நிறைந்த பொய்கையில் செவ்விதழ்கள் பொருந்திய செந்தாமரையைப் படுக்கையாகக்கொண்டு, இரவெல்லாம் துயின்ற வண்டு சீகாமரம் என்னும் பண்ணைப் பாடுகின்ற, நிலவளம் செறிந்த நன்னாடு. அந்நாட்டிலிருந்து கிழக்குப் பகுதியிலுள்ள நிலங்களைப் பாதுகாக்கும் சோழனது உறந்தை யென்னும் ஊர் தரும் பரிசிலும் சிறியதாயிருக்கும். இவ்வாறு பாணன், மூவேந்தர்களும் கொடையிற் சுருங்கிய தன்மையை உணர்த்துகின்றான்.

**கடையெழு வள்ளல்களின் அருஞ் செயல்கள் :**

சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடியொன்று, படர்ந்து செல்வதற்குரிய கொம்பு இல்லாமல் வாடிய போது, அதன் வாட்டத்தைப் போக்கத் தனது தேரைக் கொடுத்த சிறப்பினையுடையவன், வெள் ளருவி துள்ளிக் குதிக்கும் பறம்பு என்னும் மலைக்கு அரசன், பலர் புகழ்ந்து கொண்டாடும் **பாரி** வள்ளல்.

"..........சுரும்புண
நறுவீ யுறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்."

[உறைக்கும் - (தேனைத்) துளிக்கின்ற; நாகம் - சுரபுன்னை மரம்; வீ - மலர்.]

மாற்றார் மார்பைச் சிதைத்து, அவரது குருதி யைச் சுவை பார்க்கும் வேற்படையும், வீரக்கழலும் பொருந்தி விளங்கும் இயல்பினன், தனது நாட்டை யும் குதிரைகளையும் இரவலர்க்கு ஈந்த இயல்பினை யுடையவன் **காரி** யென்னும் வள்ளல்.

"..........கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த
அழல்திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கைக் காரியும்.'

[கறங்கும் - ஒலிக்கும்; ஈரம் - கருணை; அழல் - சினத்தீ; இமைக்கும் - தோன்றும்.]

வலிய தோள்களையும், இனிய மொழிகளையும் உடையவன், இரவலர்க்கு ஈயும் இயல்பினன், நாகர் தலைவன் தனக்கு அளித்த நல்ல ஆடையை,

ஆலமரத்தின் நிழலில் இருந்த இறைவனது இலிங்க உருவத்திற்கு உரிய ஆடையாகக் கொடுத்தவன் **ஆய்** என்னும் வள்ளல்.

> "...........நிழல்திகழ்
> நீல நாகம் நல்கிய கலிங்கம்
> ஆலமர் செல்வற்(கு) அமர்ந்தனன் கொடுத்த
> சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
> ஆர்வ நன்மொழி ஆயும்.',

[நிழல் - ஒளி ; சாவம் - வில் ; சாந்து - சந்தனம்.]

பெருமை பொருந்திய மலைப்பகுதியிலிருந்து அருமையாகக் கிடைத்த கருநெல்லிக்கனியைத் தான் உண்டு நீண்ட நாள் வாழும் வாய்ப்பைப் பெருது, தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு ஈந்தவன் **அதிகன்** என்னும் வள்ளல்.

> "...........மால்வரைக்
> கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
> அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கு ஈந்த
> உறவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
> அரவக்கடல் தானை அதிகனும்."

உயர்ந்த சிகரங்களையுடைய மலை நாட்டிற்குத் தலைவன், தன்னை எதிர்த்த பகைவரைக் கூற்றுவனுக்கு விருந்தாக்கும் கூர்வேல் பொருந்திய கையினையுடையவன், தம் உள்ளக் கருத்தை ஒளியாதுரைத்துத் தன்னோடு நட்புச் செய்பவர்களுக்கு, அவர்கள் இல்லறம் நடத்துவதற்கு வேண்டும் பொருள்களையெல்லாம் வரையாது வழங்கியவன் **நள்ளி** என்னும் பெயரினையுடைய வள்ளல்.

> "...........கரவாது
> நட்டோர் உவப்ப நடைப்பரி காரம்
> முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்

துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும்.''

மலைப்பக்கத்தில் காட்டில் திரியும் மயில் கூவ, அது குளிர் தாங்க இயலாது கூவிற்று எனக்கருதித் தனது விலையுயர்ந்த போர்வையை அம்மயிலின்மீது போர்த்தியவன் பேகன் என்னும் வள்ளல்.

'' வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்,''

தன்னுடைய நாடுகளை யெல்லாம் கூத்தாடுவார்க் குக் கொடுத்தவன் ஓரி யென்னும் வள்ளல்.

''..........நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னடு கோடியர்க்கு ஈந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரையும் ஓரியும்.''

இந்த ஏழு வள்ளல்களும் அந்நாளில் மேற் கொண்ட கொடை யென்னும் பெரும் பாரத்தைத் தான் ஒருவனுகவே தாங்கியவன் நல்லியக் கோடன் என நத்தத்தனர் நல்லியக்கோடனின் சிறப்பை உணர்த்துகின்றுர். இதன் மூலம் நல்லியக் கோடன் கடையெழு வள்ளல்களுக்கும் பிற்பட்ட காலத்தினன் என்பதும், அவனுக்கு ஒப்பான கொடையாளர் அந்நாளில் தமிழகத்தில் ஒருவரும் இலர் என்பதும் புலனுகின்றன.

**நல்லியக் கோடனின் நல்லியல்புகள் :**

புலவர் நத்தத்தனர், நல்லியக் கோடனின் இயல்புகளை மேலும் விவரித்து உரைக்கின்றுர் :

"நல்லியக்கோடன் சிறந்த அறிவு பெற்றவன். அவனுடைய மார்பிலும் முகத்திலும் நிறைந்து காணப்படும் தழும்புகள், அவன் பல போர்களில் ஈடுபட்டு, எதிர்த்து நின்று புண்ணுற்றவன் என்பதனை யுணர்த்துகின்றன. அவன் ஓவியர் குலத்தில் உதித்த உத்தமன். பகைவரால் அழிக்க இயலாத வலிமை பொருந்திய இலங்கை யென்னும் ஊருக்கு உரியவன். களிற்றின்மீது அமர்ந்து, அதனைக் காலால் உதைத்துச் செலுத்துவதால், அவனுடைய அடிகள் தழும்பைப் பெற்றுள்ளன. அவ்வடிகளில் அவன் வீரக்கழலை யணிந்திருக்கின்றான். மழை பெய்து மக்களையும், பிற உயிரினங்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்ற மேகம்போலத் தன்னை வந்து அடைந்த வறியவருக்கு வாரி வாரி வழங்கும் கைகளையுடையவன் அவன்; பல இன்னிசைக் கருவிகளைக் கொண்டு பாடியும் ஆடியும் மகிழ்வூட்டும் கூத்தரைப் பாதுகாக்கும் இயல்பினையுடையவன்."

இவ்வண்ணம் நல்லியக்கோடன் நற்பண்புகள் குறிக்கப்படுகின்றன.

**பாணன் பரிசில் பெற்ற நிலை :**

பின்பு நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்றுத் திரும்பிய பாணன், தான் வழியிற் கண்ட பாணனிடம், "நண்பா, இன்று என்னை நோக்கும் நீ என் நிலையைக் குறித்து மிகவும் வியப்படைகின்றாய் அன்றோ? 'செல்வம் கொழிக்கும் சீமானோ!' என்று என்னை எண்ணுகிறாய். இப்பொழுது என்னைப்பற்றி இவ்வாறு நினைக்கிற நீ, சில நாட்களுக்கு முன்பு என்னைப் பார்த்திருந்தால், என்னைக் குறித்து மிகவும் வருந்தியிருப்பாய். அப்பொழுது எனது வாழ்க்கை,

வறுமைப்பேயின் கடும்பிடியில் சிக்கிப் பொலி விழந்த நிலையிலிருந்தது. அந்நாளில் நானும் என் சுற்றத்தாரும் பசியால் வருந்தினேம். எங்கள் இல்லத்தில் உள்ள சமையலறை பொலிவிழந்து காணப்பட்டது. சமைத்துப் பலநாட்கள் ஆனமையால், அந்த அடுக்களையானது காளான் பூத்துக் காணப்பட்டது. அதற்குப் பக்கத்தில் ஒரு நாய் பசியால் வாடியிருக்கும்போது, அதன் குட்டி பாலுக்காக அதனை நெருங்குவதால் எப்பொழுதும் குரைத்துக்கொண்டேயிருக்கும். அத்தகைய சமயலறையில் குப்பைமேட்டிலிருந்து கிள்ளியெடுத்துக் கொண்டுவந்த வேளைக் கீரையை, என் மனைவி உப்பில்லாமல் வேகவைப்பாள். எங்களது வறுமை நிலையைக் கண்டு அதற்காக வருந்தாது, கேலி செய்பவர் பலர். ஆகவே மற்றையோர் காணாதவாறு வாயிற் கதவையடைத்து உள்ளே இருந்து, நானும் என் சுற்றமும் அக்கீரையையே உணவாகக் கொண்டு காலத்தைக் கழிப்போம். இவ்வாறு வறுமையிலும் செம்மையைக் கடைப்பிடித்து நாங்கள் வாழ்ந்து வந்தபோது, வள்ளல் நல்லியக்கோடனின் வள்ளன்மையைப் பலரும் புகழக் கேள்வியுற்றேம். அவ்வள்ளலைக் கண்டால் நம்மை வாட்டுகின்ற வறுமைப்பிணி 'பகலவனைக் கண்ட பனித்திரள்போல்' நீங்கும் என்று எண்ணி அவ்வள்ளலது இருப்பிடத்தை நாடிச்சென்றேம். அவனது புகழைப் பாடிக்கொண்டு சென்ற எங்களுக்கு, அவன் யானையையும், பெரிய தேரையும், மற்றும் பல பரிசில்களையும் தந்தான். அவற்றைப் பெற்றுக்கொண்டு நாங்கள் அவ்விடத்திலிருந்து வருகின்றேம். நீயும், உனது பெரிய சுற்றத்துடன் அவ்வள்ளலை நாடிச் சென்றால், வறுமையைத்

தொலைத்துப் பெருமை மிக்க வாழ்வினை அடைவாய்,'' என்று பாணன் தான் பரிசில் பெற்ற நிலையைக் குறிப்பிடுகின்றான்.

**இடைவழிச் சிறப்புக்கள் :**

பண்டை நாளில் நம் முன்னோர், நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை யென ஐவகையினவாகப் பிரித்திருந்தனர். அவற்றுள் குறிஞ்சி என்பது மலையையும், மலைசார்ந்த இடங்களையும் குறிக்கும். அந்நிலப்பகுதியில் வாழ்பவர் குறவர் அல்லது வேடர் எனப்படுவர். முல்லை என்பது காடும், காட்டைச்சார்ந்த பகுதியும் ஆகும். அந்நிலத்தில் வாழ்பவர் ஆயர் எனப்படுவர். மருதம் என்பது வயலும் வயலைச் சார்ந்த பகுதிகளும் ஆகும். அங்கு வாழ்பவர் உழவர் எனப் படுவர். நெய்தல் என்பது கடலும், கடலைச் சார்ந்த இடமும் ஆகும். அப்பகுதியில் வாழ்பவர் பரதவர் எனப்படுவர்.

மேற்கூறப்பட்ட நால்வகை நிலங்களிலும் வசிக் கின்ற மக்கள், தத்தம் நிலத்திற்கு ஏற்ற தொழிலைச் செய்து செம்மையாக வாழ்க்கையை நடத்தினர். வேடர்கள் வேட்டையாடியும் தேனெடுத்தும், ஆயர் கள் ஆநிரைகளைப் பாதுகாத்துப் பால், தயிர், வெண் ணெய் ஆகியவற்றைப் பெற்றும், உழவர்கள் நிலங்களை உழுது பயிர் செய்தும், பரதவர் அலைகடலில் நெடுந் தொலை சென்று மீன் பிடித்தும் தங்கள் வாழ்க்கையை நடத்திவந்தனர்.

மேற்கூறப்பட்ட நான்கு நிலங்களேயன்றி, ஐந் தாவதாக ஒரு நிலப்பகுதியும் உண்டு. அது எப் பொருளும் பொருந்துதல் அற்ற, வறண்ட நிலமாகக்

காணப்பட்டதால் பாலை யென்னும் பெயரைப் பெற்றது. பாலை என்பது ஒரு தனிப்பட்ட நிலம் அன்று. குறிஞ்சி, முல்லை ஆகிய மற்றைய நிலங்கள் கதிரவனின் வெம்மையால் வறண்டு, எப்பொருளும் தோன்ருத நிலமாகும்போது பாலையாகத் தோற்றமளிக்கின்றன. ஆகவே அதனை நிலவகையிற் சேர்க்காது 'நானிலம்' என்றே நவில்வது சான்ருேர் மரபு. நல்லியக்கோடனது நாடு இந் நால்வகை நிலங்களையும் தன்னகத்தே பொருந்தப்பெற்றது.

நல்லியக்கோடனை நாடிச் செல்பவர், முதலில் நெய்தல் நிலப்பகுதியை யடைவர். அந்நிலப்பகுதியில் கடலானது அகன்று பரந்து, அலைகள் கரையில் மோதும் காட்சியைக் காணலாம். அக்கரையினிடத்தில், வெண்மையான மணற்பரப்பில் உள்ள தாழைகள் அன்னம்போன்ற அழகிய மலர்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. செருந்தியின் மலர்கள், பொன்னைப் போல விளங்கிக் காண்பவர் கண்களைப் பறிக்கின்றன. கழிமுள்ளி யென்னும் செடி, நீல நிறம் பொருந்திய இரத்தினத்தைப் போன்ற நீல மலர்களைக் கோலமுறப் பெற்று இலங்குகின்றது. புன்னைமரம் முத்துக்களைப் போன்ற வெண்ணிறப் பூங்கொத்துக்களைப் பெற்று நிற்கின்றது.

இத்தகைய எழில் மிக்க நெய்தல் நிலத்தில் எயிற்பட்டினம் என்னும் பெயரினையுடைய ஓர் ஊர் உளது. அவ்வூரையடைந்தால், பரதவர் குலத்தில் உதித்த ஒரு பெண், கடல் அலைகள் கரையில் ஒதுக்கிய அகிற் கட்டையை விறகாகக் கொண்டு தீயுண்டாக்கி, உலர்த்தப்பட்ட குழல் என்னும் மீனைச் சுட்டு, நன்ருகப் பக்குவம் செய்து அதனைக் கொடுப்பாள். அப்போது பரதவர், பழமையான கள்ளைக் கொடுத்து

உண்ணச் செய்வர். இவ்வாறு அப்பட்டினத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் உறைபவர் தமது ஊர் நாடிவந்த விருந்தினர்க்கு நல்லுணவு அளிப்பர்.

''இந்நெய்தல் நிலப்பகுதியைக் கடந்தால், முல்லை நிலத்தின் எல்லையை யடையலாம். அந்நிலத்தில் பசுமையான அரும்புகளையுடைய அவரையானது, பவளம்போலச் செந்நிறம் பொருந்தி விளங்கும் பூக் களைப் பூக்கும். கருமை நிறம் பொருந்திய காயா என்னும் செடியானது மயிலின் கழுத்தைப் போன்ற நீண்ட பொன்போற் பிரகாசிக்கும் நீலநிறப் பூக்களைக் கொண்டு விளங்கும். முசுட்டை யென்னும் செடி, பனையோலையால் செய்யப்பட்ட கொட்டம் என்னும் ஒருவகைப் பெட்டியைப்போன்று விளங்கும். காந்தட் செடி, கைவிரல்களைப் போன்று மலரும்; இத்தகைய இயல்பினையுடைய முல்லை நிலத்தில் வேலூர் என் னும் ஊர் சிறந்து விளங்குகின்றது.

'' அவ்வூர் நல்லியக்கோடனது வெற்றிச் சிறப்பு மிக்க ஊராகும். அங்கு வசிக்கின்ற எயினர் குலத் தைச் சேர்ந்த பெண் தனது இல்லம் நாடி வருபவ ருக்கு இனிய ஆமானினது இறைச்சியையும், புளி யோடு சேர்த்துச் சமைத்த இனிமையான சோற்றை யும் அளித்து, அவர்களது பசியைப் போக்கு வாள்.

இந்நிலப்பகுதியைக் கடந்தால் அடுத்துக் காணப் படுவது நிலவளம் சூழ்ந்த மருதநிலப் பகுதியாகும். அங்கு உள்ள காஞ்சி யென்னும் மரத்தின் பெரிய கிளையில் ஏறியிருந்து, அருகில் உள்ள நீர் நிறைந்த பொய்கையில் திரியும் மீன்களைக் கொத்துவதற்கு ஏற்ற காலத்தை யெதிர்நோக்கும் மீன்கொத்திப் பறவை யானது, நீரின் மேற்பாகத்திற்குப் பெரிய கயல்மீன்

கள் வரும்போது விரைவாகப் பாய்ந்து அவற்றைக் கொத்தி எடுக்கும். அவ்வாறு அப்பறவை பாய்ந்து மீனைக் கொத்தும்போது, அதன் கால்களில் உள்ள நகங்கள் கிழித்த வடுவினையுடைய பசுமை நிறம் பொருந்திய இலைகளையுடைய வெண்டாமரையின் தேனை வண்டுக் கூட்டங்கள் உண்கின்றன. அக் காட்சி கிரகண காலத்தில் சந்திரனைச் சூழ்ந்துள்ள கரும்பாம்பு போலத் தோற்றமளிக்கும். அத்தகைய சிறப்பினையுடைய மருதநிலத்தில் ஆமூர் என்னும் சிறப்புமிக்க ஊர் ஒன்று உள்ளது.

"சிறந்த காவலையும், உயர்ந்த புகழையும், நிறைந்த செல்வத்தையும் உடைய அவ்வூரையடைந் தால் அங்கு உள்ள உழவர், செல்பவரை எதிர்கொண்டு அழைத்து இன்னுரை கூறி இன்புறுவர். அவ்வுழவர் கள்ளங் கபடற்ற வெள்ளை மனம் படைத்தவர் ; சிறந்த காளைகளை ஏரினது நுகத்தடியில் பூட்டி, நிலத்தை உழுது பண்படுத்துகின்ற தொழிலையுடையவர். அவ்வுழவர் இல்லத்து மகளிர் செம்மையாகத் தீட்டப் பெற்ற அரிசியால் ஆக்கிய சோற்றையும், நண்டும் பீர்க்கங்காயும் கலந்த குழம்பையும் உணவாகத் தந்து ஓம்புவர்."

இவ்வாறு பரிசில் பெற்றுத் திரும்பிய பாணன், மற்றப் பாணனுக்கு நல்லியக்கோடனது நாட்டில் காணப்படும் சிறப்புக்களைப்பற்றி உரைக்கின்றான்.

**நல்லியக்கோடனது அரண்மனை :**

"வள்ளல் நல்லியக்கோடனுக்கு உரிய எழில்மிக்க எயிற் பட்டினம், வெற்றிமிக்க வேலூர், அழியாத செழிப்புற்ற ஆமூர் என்னும் ஊர்களைக் கடந்து சென்றால், அவனது கோநகரமாகிய கிடங்கில்

என்னும் நகரை யடையலாம். அந்நகரம் செல்வத்திற் சிறந்த பல தெருக்களைப் பெற்றுள்ள பழமையான ஊராகும். அந்நகரில் அண்ணல் நல்லியக்கோடனின் அரண்மனை அழகு பொலியத் தோற்றமளிக்கும். அவ்வரண்மனையின் வாயிலானது, பாடல் பல இசைக்கும் பாவலர்க்கும், இன்னிசை பாடும் பாணர்க்கும், வேதத்தின் உட்பொருளை யுணர்ந்த அந்தணர்க்கும் என்றும் அடைக்கப்படாத நிலையையுடையதாக இருக்கும். மற்றையோர் அவ்வாயிலைக் கடப்பது அரிதான செயலாகும்.''

**நல்லியக்கோடனின் நல்லியல்புகள் :**

''அம்மனையில் இருந்து மக்களைப் புரக்கும் மன்னன் நல்லியக்கோடன் செய்ந்நன்றி மறவாத இயல்பினன் ; அறிவும் ஒழுக்கமும் பொருந்தாத சிறியோர் கூட்டுறவை யொழித்தவன் ; தன்னை நாடி வரும் குடிமக்களை அகமும் முகமும் மலர வரவேற்று, அவர்களது குறையை அறிந்து ஆவன செய்யும் இயல்பினை யுடையவன் ; பல கலைகளையும் உணர்ந்த பண்பினன் ; தன் வீரத்தைக் கண்டு அச்சமுற்று, அடிபணிந்த பகைவர்க்கு அருள் செய்யும் தன்மையன் ; சினத்தை நீக்கிய சிறந்தோன் ; தன்னை எதிர்த்த மாற்ருர் படைகளைச் சிதைத்து, கூற்றுக்கு விருந்தாக்கும் ஆற்றல் படைத்தவன் ; உள்ளத்தால் உன்னிய ஒரு செயலைத் தெள்ளிய முறையில் செய்து முடிக்கின்ற திறமையுடையவன். அறிவற்ற மக்களிடத்தில் ஒன்றைப்பற்றிக் கூறினுல், அவர்கள் அதன் உண்மையை யுணரமாட்டார்கள். 'செவிடன் காதில் ஊதிய சங்குபோல' அது பயன் அற்றதாய்

முடியும் என்பதனை நல்லியக்கோடன் உணர்ந்தவ னுதலின், அவர்கள் இடையே, அவன் எதனையும் அறியாதவனுகவே நடிப்பான். அறிவுடையவர் கூட் டத்தில் அறிஞனுகத் திகழ்வான். தன்னை நாடி வருகின்ற வறியவரது தகுதிக்கு ஏற்றவாறு பரிசில் அளிப்பான். இத்தகைய இயல்புகளையுடைய அவ் வள்ளல், பாணர், கூத்தர், புலவர் முதலியோர் புடை சூழ 'விண் மீன்களுக்கு நடுவில் திகழும் வெண்மதி போல' வீற்றிருப்பான்,''—எனப் புலவர் பெருமான் நல்லியக்கோடனைப் பற்றியும், அவனது இருப்பிடத் தைக் குறித்தும் அழகுபடக் கூறியுள்ளார்.

### யாழின் அமைப்பும் உறுப்புக்களும் :

மேலும் இந்நூல் யாழின் இயல்பையும் விளக்கு கின்றது. யாழானது திவவு அல்லது வார்க்கட்டு, பத்தர், நரம்பு, கோடு என்னும் உறுப்புக்களோடு கூடி விளங்கும். யாழினது நரம்புகளை முறுக்குவதற் கும், தளர்த்துவதற்கும் பொருந்தியுள்ள நரம்புக் கட்டுகள் 'திவவு' எனப்படும். அவற்றின் இயல்பு மிகச் சிறந்த முறையில் வர்ணிக்கப்பட்டுள்ளது. ''இருங் குரங்கு ஒன்று ஒரு பாம்பின் தலையைப் பிடித்த போது, அப்பாம்பு அக்குரங்கினது கையை ஒரு முறை இறுக்கமாகவும், மற்றொரு முறை நெகிழவும் சுற்றியதுபோல, யாழினது தண்டில் அமைந்து நரம்புகளைப் பண்ணிசைக்கேற்றவாறு நெருக்கியும், தளர்த்தியும் விடுவதற்குத் திவவு என்னும் நரம்புக் கட்டு அமைந்துள்ளது,'' எனத் திவவின் இயல்பு கூறப்பட்டுள்ளது. கருநிறம் பொருந்திய மரத்தால் செய்யப்பட்ட யாழின் தண்டு கருங்குரங்கினது கரத்

திற்கும், அத்தண்டில் சுற்றப்பட்டுள்ள நரம்புகள் பாம்பிற்கும் உவமிக்கப்பட்டிருப்பது' உன்னுதற் குரியது.

பத்தர் என்னும் உறுப்பு, நரம்புகளில் இருந்து எழுகின்ற ஓசையைப் பெருக்குவதற்காக யாழில் அமைந்துள்ள குழிவான பாகம் ஆகும். அப்பகுதி சிறந்த முறையில் அமைந்து உள்ளது. நரம்புகள் தேன் ஒழுகுகின்ற தன்மையைப்போல நேராக முறுக்கில்லாமல் அமைந்துள்ளன ; அமிழ்தம்போன்று இனிக்கின்ற இனிய ஓசையைத் தம்மிடத்தே பொருந்தியுள்ளன. கோடு என்பது யாழினது நீண்ட தண்டுப் பகுதியாகும். இத்தகைய சிறந்த யாழ் ஒரு சிறந்த உறையினுள் வைக்கப்பட்டு உள்ளது. அவ்வுறையானது குமிழம் பழத்தைப் போலச் செந்நிறம் பொருந்தியதாக இலங்குகின்றது. இவ்வாறு யாழின் இயல்பு விவரித்து உரைக்கப்படு கின்றது.

**பாணன் பாடும் முறை :**

"நல்லியக்கோடன்பால் பரிசில் பெற நினைக் கின்ற பாணன், அறிஞரும் மற்றையவரும் புடைசூழ விளங்குகின்ற மன்னனைக் கண்டு, தன்னுடைய இனிய யாழில் 'செம்பாலை' என்னும் பண்ணை அமைத்து அவனைப் புகழ்ந்து பாடுதல் வேண்டும். 'முதியவர்க்குப் பணியும் இயல்பினை யுடை யோனே,' என்றும், 'மாற்றார் தன்மீது எறிகின்ற வேற்படைக்கு மார்பை யிடமாகக் கொடுத்த மன் னனே,' என்றும், 'குடிமக்கள் துயர் நீக்கிக் கோலோச்சும் குணக்குன்றே,' என்றும் அவனைக் குறித்துச் சில உரைகளைக் கூறுதல் வேண்டும்."

**நல்லியக்கோடன் பரிசில் நல்கும் முறை :**

"இவ்வாறு பாணன் தன்னேக் குறித்துப் புகழ்ந்து பாடும்போது நல்லியக்கோடன் மிக மகிழ்ச்சியுறுவான்; அப் பாணனுக்குப் பல பரிசில்கள் தந்து பாராட்டுவான்; மிகவும் சிறந்த மெல்லிய ஆடையை அளிப்பான். மயக்கத்தைக் கொடுக்கும் சிறந்த கள்ளேக் கொடுத்துக் களிப்பூட்டுவான். பஞ்சபாண்டவர்களுள் ஒருவனுன வீமன், அறுசுவை யுணவை அதிவிரைவிற் செய்யும் அடிசிற் கலேயில் மிகவும் சிறந்தவன். ஆகவேதான், சிறந்த சுவைபொருந்திய இனிய உணவை வீமபாகம் என்று கூறுகின்றனர். வீமன் என்னும் அக்கலேஞன் கண்ட முறையில் சிறிதும் பிறழாது சமைத்த பல்வேறு வகையான உணவை, விண்ணில் எழுந்து மண்ணில் ஒளிபரப்பும் வெங்கதிரைப் போன்று ஒளிவீசும் பொற்பாத்திரத்தில் இட்டு, பாணனே உண்ணும்படி செய்வான்; அவனேடு தானும் உடனிருந்து உண்பான்; தன்னே எதிர்த்த மன்னர்களுடைய அரண்களே யழித்து ஆண்டிருந்து கொண்டுவந்த பொருளேக் கொடுப்பான். பின்பு மற்றெரு சிறந்த பரிசிலும் அவ்வள்ளல் நல்குவான். அப்பரிசில் சிறப்புமிக்க தேராகும்.

"மழைக் காலத்தில் மானமானது கருமேகங்களால் சூழப்பட்டுக் கருநீல நிறமாக விளங்குவது இயற்கை. அத்தகைய மழைக் காலத்தில் வான வெளியில் தோன்றும் சந்திரன் தெளிவாக விளங்கும். அத்தேரின் சக்கரங்கள் அம்மதியைப்போல் விளங்குகின்றன. சிறந்த தச்சர்கள் சிற்றுளியைக்கொண்டு செதுக்கிய சிற்பங்களோடு கூடிய குறட்டில் பொருத்தப்பட்ட ஆர்களேக் கொண்டுள்ள சூட்டினேப் பெற்

றுள்ளன அச்சக்கரங்கள். [குறடு என்பது தேரி னுடைய அச்சு கோக்கப்படும் துளையை உடைய பகுதியாகும். வண்டிச் சக்கரத்தின் உருளை வடிவ மான இப்பாகமே குறடு எனப் பண்டை நாளில் குறிப்பிடப்பட்டு வந்தது. அது இக்காலத்தில் 'குடம்' எனப்படுகின்றது. ஆர் என்பது அவ்வுருளையோடு பொருத்தப்பட்டுள்ள ஆரக்கால்களாகும். இவை இக் காலத்தில் 'இலைகள்' என வழங்குகின்றன. சூடு என் பது அந்த ஆரக்கால்களுக்குமேல் சுற்றிலும் பட்டை யாக அமைந்து நிலத்தில் பொருந்தும் பாகமாகும். அது 'வட்டை' என இந்நாளில் கூறப்படுகின்றது. 'கலியாண முருங்கை' யென இந்நாளில் வழங்கப் படும் செம்முருக்க மரத்தின் மலர் தீயைப்போலச் செந்நிறம் பொருந்தியதாக இருக்கும்.] தேர்த்தட்டின் மீது பரப்பப்பட்டுள்ள பலகையானது சாதிலிங்கம் என்னும் செந்நிறம் பொருந்திய வர்ணம் பூசப்பட்டு, அழகாக விளங்கும் தோற்றம் செம்முருக்க மலர்களைப் போன்று அமைந்துள்ளது. வள்ளல் நல்லியக்கோடன் அத்தேருடன் அதனைச் செலுத்துதற்கு உரிய பாகனை யும் சிறந்த எருதுகளையும் கொடுப்பான். மேலும் அப்பாணன் விரும்பியவற்றையும் கொடுத்து அனுப்பு வான்.'' இவ்வாறு புலவர் நத்தத்தனார் நல்லியக் கோடன் பரிசில் நல்கும் முறையைப்பற்றி விவரிக் கின்றார்.

முடிவு:

இனி, இதுவரையிற் கூறப்பட்ட விஷயங்களின் சுருக்கத்தைக் காண்போம்: வள்ளல் நல்லியக்கோடன் பாற் சென்று பரிசில்பெற்றுத் திரும்புகின்ற பாணன்

ஒருவன் தான் வரும் வழியில் வறுமையால் வாடிய சிறு பாணன் ஒருவனைக் கண்டு அவனிடம் "பாணனே, நீ உனது வறுமையைக் களைய மூவேந்தர்களை நாடிச் சென்று பயனில்லை. அவர்களுடைய நகரங்கள் வளத்தில் குன்றின. கடையெழு வள்ளல்களும், மண்ணுலகில் தாம் செய்த கொடையின் பயனாய் அழியாப் புகழ் பெற்று அமரர் உலகம் அடைந்தார்கள். அவர்களுக்குப் பின்பு தோன்றிக் கொடைத் தன்மையிற் சிறந்தவனாய் விளங்கும் நல்லியக்கோடனை நாடிச் சென்றால், நன்மை அடைவாய். அவனை நாடிச் செல்லும்போது, கடல்வளம் சூழ்ந்த எயிற் பட்டினத்தைக் காண்பாய். அங்கு உள்ள பரதவர் உனக்கும், உன் சுற்றத்தாருக்கும், மதுவும் மீன்கறியும் மகிழ்ந்து அளிப்பர். பின்பு முல்லைவளம் செறிந்த வேலூரை யடைந்தால், அங்கு வாழ்பவர் ஆமானின் இறைச்சியோடு, இனிய உணவையும் அளிப்பர்; அதனையும் கடந்து சென்றால், நிலவளம் செறிந்த ஆமூர் தென்படும். அங்கு வாழும் உழவர் நண்டும் பீர்க்கங்காயும் கலந்த குழம்போடு வெண்மையான சோற்றையளித்து உன் சோர்வைப் போக்குவர். அவ்வூரையும் கடந்து சென்றால், வள்ளலின் தலைநகராகிய 'கிடங்கில்' என்னும் நகரம் தோன்றும். அந்நகரில் அரண்மிக்க மனையில், அறிஞர் புடைசூழ அமர்ந்திருப்பான் நல்லியக்கோடன். அவனைக்கண்டு, யாழை இசைத்து, அவன் புகழைப் பாடினால், அவன் உனது இசைக்கு மிக மகிழ்ந்து இன்புறுவான்; உனக்கு ஆடையணிகலன்களையும் அறுசுவை உணவையும் அளித்து மகிழ்வான்; பெரும் பொருளைக் கொடுப்பான்; சிறந்த தேரையும் அத்தேரில் பூட்டும் எருதுகளையும்,

அதனைச் செலுத்தும் பாகரையும் கொடுப்பான். ஆகையால் இப்பொழுதே அவனை நாடிச் செல்வா யாக'' என்று கூறி ஆற்றுப்படுத்துதல் சிறுபாண் ஆற்றுப் படையில் காணப்படும் திரண்ட பொரு ளாகும்.

இந்நூல் தமிழ் மக்களின் பண்டைக்கால வாழ்க்கை முறையையும், நால்வகை நிலங்களின் வளத்தையும், நல்லியக்கோடனின் இயல்பையும் நன்கு விளக்குகின்றது. இதனைப் போன்ற மற்றும் சில ஆற்றுப் படைகள் பத்துப் பாட்டில் இடம் பெற் றுள்ளன. அவற்றைப் படித்து இன்புறுக!

## (2) முல்லைப் பாட்டு

நாம் இதுகாறும் பத்துப்பாட்டில் ஒன்றாக இலங் கும் சிறுபாணாற்றுப் படையைப்பற்றி அறிந்தோம். இனி அத்தொகையில் பிறிதொரு நூலாக இலங்கும் முல்லைப் பாட்டின் இயல்பை நோக்குவோம்.

இந்நூலானது முல்லை யென்னும் திணைக்கு உரிய ஒழுக்கமாகிய 'இருத்தல்' என்பதனை அடிப்படை யாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும். தலைவன் ஒருவன் பகைவரொடு போர் புரிதற்கும், பொருளீட்டு தற்கும், கல்வி பயிலுதற்கும் என இன்னோரன்ன பல காரணங்களால் பிரிந்து செல்லும்போது, அவன் இல் லத்திற்கு வருமளவும், தனது துயரைப் பொறுத்துக் கொண்டு இருப்பது தலைவியின் கடைமையாகும். இதுவே 'இருத்தல்' எனப்படும் ஒழுக்கமாகும். ஒரு மன்னன் மாற்றானோடு போர் புரிதற்குச் செல்லுங்கால் வருந்திய தன் மனைவியைத் தேற்றிக் கார் காலத்தில் மீண்டு வருவதாகச் சொல்லுகிறான். அப்பெண்மணி

தன் கணவன் வரும்வரை ஆற்றியிருந்த செய்தியை யும், அம்மன்னன் மாற்ருரோடு போர் புரிந்து வாகை சூடிய தன்மையையும், கார் காலத்தின் தோற்றத்தை யும், முல்லைக் கொடி படர்ந்து மணம் வீசும் முல்லை நிலத்தின் இயல்பையும், அந்நிலத்தில் வாழும் ஆயர் களது தன்மையையும் அழகுற எடுத்தியம்புகிறது இந்நூல்.

இது நப்பூதனுர் என்ற புலவராற் பாடப்பட்டது. அவர் ' பூம்புகார் ' எனப் புலவர்கள் கொண்டாடும் காவிரிப்பூம்பட்டினத்தில் பொன் வணிகராய்விளங்கிய ஒருவரின் மகனுவர். இனி முல்லைப் பாட்டின் இயல்பைக் காண்போம் :

பல்வகை யரணும் பொருந்திய பழம்பதி யொன்றைத் தனது தலைநகராகக் கொண்டு அறிவும், ஆற்றலும் ஒருங்கே யமையப்பெற்ற மன்னவன் ஒருவன், அறநெறி வழுவாது அரசோச்சி வந்தனன்.

" குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

என்று வள்ளுவரின் வாய்மொழி கூறுவது போன்று, அந்நாட்டு மக்கள் தம் மன்னன்பால் பேரன்பு உடையவராக விளங்கினர் ; தமது நாட்டின் மீது எல்லையில்லாப் பற்றுக் கொண்டிருந்தனர் ; மாற்ரு னது படை யெடுப்பைக் கண்டு, மனங்கலங்கி, அடிபணியும் கோழைகளல்லர். அம்மன்னனும் மாற் ருரோடு பற்பல போர்கள் புரிந்து, எண்ணற்ற தழும்பு களைத் தனது உடம்பில் அணியாகக் கொண்டு வாழ்ந் தனன். 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள் ' என் னும் ஆன்ருேர் வாக்கிற் கிணங்க, அவனது அமைச் சர் முதலாயினேர், குறிப்பறிந்து ஒழுகும் சிறப்புடை யராய் விளங்கினர். அவ்வாறே அம்மன்னனின் நால்

வகைப் படைகளும் சிறந்த முறையில் விளங்கி வந்தன.

இத்தகைய சிறப்புமிக்க மன்னனை வேற்றுநாட்டு மன்னன் ஒருவன் பகைத்துக் கொண்டான். பாவம்! இவனது வலியைப்பற்றி அவன் அறிந்திலன் போலும். 'துஞ்சு புலி இடறிய சிதடன் போல' தன்னை யெதிர்க்கத் துணிந்த அவனுக்குத் தனது ஆற்றலை வெளிப்படுத்த எண்ணிய மன்னன் தானைத் தலைவர்களை நோக்கி, "நால்வகைத் தானையையும் திரட்டுக," எனப் பணித்தனன்.

மன்னனது நால்வகைப் படைகளும் உழுந்து கண்ணுடியில் உருளும் அளவையில் கடலொலி போன்று ஆர்த்துத் திரண்டன. போர் உடை பூண்டு பேருவகையுடன் பொருகளம் நோக்கிப் புறப்பட்ட மன்னன், தன் இல்லாளை யணுகி, அவளிடம் தான் போருக்குச் செல்ல வேண்டிய அவசியத்தை யெடுத்துக்கூறி, கார்காலம் வரு முன்னர் மீண்டு வருவதாகத் தெரிவித்து, விடைபெற்றுக் கொண்டு விரைந்து வெளிப்போந்தனன்.

மன்னவன் செல்ல, நால்வகைப் படைகளும் பகைவர் நாட்டினை நோக்கிச் சென்றன. தெவ்வர் தேயத்தை நோக்கிச் சென்ற மன்னவன் கண் முன்னர் அன்னாரது காட்டரண் தோற்றமளித்தது. செழித் தோங்கி வளர்ந்த மரங்களால் சூழப்பட்டு, புள்ளினங் களுக்கும், விலங்கினங்களுக்கும் உறைவிடமாக இலங் கிய அக்காட்டின் நடுவண் நிலமடந்தைக்கு இட்ட ஆரம்போல ஓர் அழகிய காட்டாறு சென்றது. அக்காட்டில் வாழும் வேடர்கள் சிறிய வாயில் அமைந்த அரண்களை அமைத்துக் கொண்டு வாழ்ந் தனர். பகைவரது காட்டின்கண் புக்க படைகள் தாம்

தங்குவதற்கென ஓர் இடத்தை ஆராய்ந்தெடுத்துப் படை வீடுகள் அமைக்கத் தொடங்கின.

மன்னனுடன் வந்த கைதேர்ந்த கொல்லர்கள் படை வீடுகள் அமைக்க முற்பட்டனர். மாற்றுரை எதிர்த்து வெற்றி பெறுதற்குக் கருவியாய் இலங்கும் விற்படைகளைக் கால்களாக அமைத்து, அவற்றின் ஓரங்களில் பல்வகைச் சித்திர வேலைப்பாடுகள் பொருந்திய செந்நிறத் துணியைத் தோரணங்களாக அமைத்தனர். காற்றிலே அசைந்தாடி எழிலுடன் விளங்கும் அவை, உலகைத் துறந்து, காவியுடை தரித்துத் தன் உயிரை வருத்தும் கொடிய நோன்புகள் பலவற்றை நோற்ற தவவடிவினனாகிய பார்ப்பனன் கையில் தாங்கியுள்ள முக்கோற் பிரம்பு அசைவதை நினைவூட்டுகின்றன. இதனை

“ கற்றுரைய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்லிற் றூணி நாற்றி.”

என்னும் அடிகள் விளக்குகின்றன.

பின்னர் அக்கொல்லர்கள் அப்பாடி வீடுகட்கெல் லாம் தழைகளைக் கூரைகளாக வேய்ந்து, அணி செய் தனர். இவ்வாறு படை வீடுகளைப் பல தெருக்களாக அமைத்து, அவற்றிற்கிடையே நாற்சந்திகள் கூடும் இடங்களிலெல்லாம் பெரிய முற்றங்களை யமைத்தனர். அம்முற்றங்கள் தோறும் பல யானைகள் காவல் காத்து நின்றன. அவை கன்னங்களினூடே வழிந்தோடும் மதநீரையும், சிறய கண்களையும் பெற்றவை. செய் களில் செழித்தோங்கி நிற்கும் கரும்புகளையும், செந் நெற்கதிர்களையும், நெருங்கக்கட்டிய அதிமதுரத் தழை யினையும், வீரர்கள் படை வீட்டைக் காவல் புரியும் களிற்றினங்களுக்கு உணவாகத் தர, மதமிக்க அக்

களிறுகள் அவற்றை விரும்பாது, 'தமது நீண்ட துதிக்கைகளால் வாரித் தம் நுதலைத் துடைத்து எறி கின்றன. உடல் வலிவும், இளமை யெழிலும் மிக்குக் களிற்றினங்களை யடக்குதலின்றி, வேறொரு கலையை யும் அறியாத பாகர்கள் இதனைக் கண்டனர். அவர்கள் மலையென விளங்கும் அம்மத வேழங்களின் அருகிற் சென்று அங்குசம் என்னும் கருவியால் குத்திச் சில வடமொழிச் சொற்களைக் கூறி உணவை யளிக்க, அவை வேறு வழியின்றி அதனை யுட்கொள்கின்றன. களிற்றினை யடக்குதற்குக் கல்லாப் பாகர்கள் பயன் படுத்துபவையே வடமொழிச் சொற்கள். அவை "அப்புது, அப்புது, ஆது, ஆது, ஐ, ஐ" என்பன வாம். இச்செய்தியை,

> "தேம்படு கவுள சிறுகண் யானை
> ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
> வயல்விளை யின்குள குண்ணது நுதல்துடைத்து
> அயில்நுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
> கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
> கல்லா இளைஞர் கவளம் கைப்ப."

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

[அ. பொ: கவுள - கன்னத்தை உடைய; குளகு - அதி மதுரத்தழை; கவை முட்கருவி - அங்குசம்].

இத்தகைய வில்லரணமே காவலாகப் பெற்ற பாடி வீடுகட்கு இடையில் 'நீண்ட குத்துக்கால்களால் அமைக்கப் பெற்ற அழகிய உயர்ந்த ஒரு வீடு காட்சி யளிக்கின்றது. விண்மீன்களுக்கு இடையில் விளங் கும் தண்மதிபோல விளங்கிய அவ்வீடு, மன்னன் தங்குதற்கு உரியதாக இலங்கிற்று. அது வீரர்களால் பாதுகாக்கப்படும் இயல்பினையுடையது. அவ்வீரர்கள் யவன நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் ஆவர்.

பண்டை நாளில் வாணிகத்தை நோக்கமாகக் கொண்டு, வளமிக்க தமிழ் நாட்டை நோக்கி வந்த யவனர்கள், வீரத்திலும், வலிமையிலும் சிறந்தவராய் விளங்கினமையால் மன்னவன் அவர்களைத் தன்னுடைய படைகளில் சேர்த்துக் கொண்டான்.

யவன வீரர்களால் பாதுகாக்கப்படும் மன்னனது பாடி வீடானது இருள் சூழ்ந்த இரவுக்காலத்திலும் பகற்போல ஒளிமிக்குத் தோன்றுமாறு, எண்ணிறந்த விளக்குகள் எழில் மிக்க இள நங்கையரால் ஏற்றப்பட்டு அணையாவாறு பாதுகாக்கப்படுகின்றன. வளையலையணிந்த முன் கையினையும், இடையிற் கச்சோடு இறுகக்கட்டிய உடைவாளையும் பொருந்திய அம்மங்கையர் தமது கையில் நெய்யை உமிழும் சுரைக் குடுவைகளையும், பெரிய தீப்பந்தங்களையும் ஏந்தி நிற்கின்றனர். ஒழுங்காக அமைந்துள்ள அப் பாடி வீட்டின் விளக்குகள் அணையின், அவற்றின் திரிகளை ஒழுங்குபடுத்தி, மீண்டும் சுடர்விட்டு எரியும்படி செய்வது அவர்களது கடமையாகும். இச்செய்தியை ஆசிரியர் நப்பூதனுர்,

“ குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து
இரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட.”

என்னும் அடிகளின் வாயிலாக உணர்த்துகின்ருர்.

[அ. பொ : தொடி - வளையல் ; நந்துதல் - அணைதல்.]

இரவுப் போதின் முற்பகுதி கழிந்து, நள்ளிரவானபடியால், பாடி வீடுகளில் தங்கியுள்ளோர் அனைவரும் அயர்ந்து உறங்கினமையால், எங்கும் அமைதி நிலவிற்று. யானை, குதிரை யென்னும் விலங்கினங்

கள் கூடக் கண்ணயர்ந்துவிட்டன. அதனுல் அவற்றின் கழுத்தில் கட்டப்பெற்றிருந்த மணிகள் அசைந்து ஒலி செய்யும் தொழிலை நீத்தன. உயிரினங்கள் யாவும் உறக்கத்திற் ஆழ்ந்துகிடக்கும் அந்நள்ளிரவில் மன்னனது பாடிவீட்டில் மட்டும் விளக்குகள் பேரொளி வீசித் திகழ்ந்துகொண்டிருந்தன. அவ்வில்லத்தைக் கடமையுணர்ச்சியைத் தமது உடைமையாகக் கொண்ட காவலர்கள் காத்துவந்தனர். அக்காவலர்கள் முதுமைப்பருவம் எய்தியவராகவும், மெய்ப்பையும் (சட்டையும்) தலைப்பாகையும் தரித்தவராகவும் விளங்கினர். அவர்கள் தம்மை மயக்குகின்ற உறக்கத்தினுல் அசைந்து கொடுக்கின்றனர். இவ்வாறு அவர்கள் உறக்கத்தின் காரணமாக அசைவது, பூத்துக் குலுங்கும் அழகிய பூங்கொடியொன்று மழைத் திவலைகளைத் தள்ளிக்கொண்டு வரும் மென்காற்றில் இனிதே அசைந்தாடுவதை நினைப்பூட்டுகின்றது.

இத்தகைய பாடி வீட்டினுள், பொழுதை யளந்து அறிகின்ற மக்கள் மன்னன் முன்பு சென்று வணங்கி நின்று, இரவின் பெரும்பகுதி கழிந்துவிட்டதை யுரைக்க, அச்சமூட்டும் தோற்றத்தையும், வலிமை பொருந்திய உடம்பையும் உடையவராகவும், உள்ளக் கருத்தை உரைக்கும் வகையற்ற ஊமையராகவும் விளங்கிய யவன வீரர்கள் தன்னருகே சூழ்ந்து விளங்கும்படி, அழகிய விளக்கு மாணிக்கம்போல் ஒளி விடும் சிறந்த அறையில் உள்ள படுக்கையில் ஒரு கையை யூன்றிக்கொண்டு மற்றொரு கையைத் தலையோடு சேர்த்து, மன்னன் அமர்ந்திருந்தான் என ஆசிரியர் கூறுகின்ருர்.

பண்டைக்காலத்தில், இந்நாள்போன்று, நேரத்தை யறிவித்தற்குரிய கருவிகள் இல்லாமையால் மக்கள்

நேரத்தையறிவதற்கென ஒரு முறையைத் தெளிந்து கையாண்டனர். ஒரு பெரிய கடாரத்தில் நீரை நிறைத்து, அதனுள் சிறு துளையுள்ள வட்டில் ஒன்றை இடுவர். அவ்வட்டில் நீரில் மிதக்கும். அவ்வட்டிலில் குறிப்பிட்ட நேரத்தில் ஓர் குறிப்பிட்ட அளவு நீர் ஏறும். அந்நீரின் அளவைக்கொண்டு இவ்வளவு நாழிகையாயிற்று என்று கணிப்பர். இவ்வாறு நேரத்தைக் கணக்கிட்டுக் கூறும் 'கணிகள்' எனப்பட்ட மக்கள் மன்னனொடு என்றும் இருப்பர்; அவர்களையே ஆசிரியர் "பொழுதளந்தறியும் பொய்யா மாக்கள்" எனக் குறித்தார். மன்னனது பள்ளியறையைக் காவல் செய்பவர் பேசுந் திறனைப் பெற்றிருப்பராயின், மன்னன் உறங்குங்கால் பேச முற்பட்டு, அவனது உறக்கத்திற்கு இடையூறு செய்வர். அக்காரணத்தாலேயே மன்னர்களது பள்ளியறைக் காவலர் உரைக்குந் திறனற்ற ஊமையராக அமர்த்தப்பட்டனர்.

பொழுதறியும் மக்கள் இரவின் நெடுநேரம் கழிந்ததை யுணர்த்திய பின்னரும், மன்னன் உறக்கங் கொள்ளானாய்ச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பல எண்ணங்கள் அவன் மனத்தின்கண் தோன்றின. அன்றைய பகற்போதில் நிகழ்ந்த பெரும் போரில் அவன் கண்ட கொடுமைக் காட்சிகள் அவனது உள்ளத்தைப் புண்படுத்தின. அப்போரில் வெட்டுண்டு மாய்ந்த களிற்றினங்களைப்பற்றியும், குதிரைகளைப் பற்றியும், பல அம்புகள் தைக்கப்பெற்றமையால் மிக்க துன்பங்கொண்ட மாப்படையைப் பற்றியும், மன்னவன் வெற்றிபெற வேண்டுமென எண்ணிப் போர் புரிந்து மாண்ட வீரர்களைப்பற்றியும் எண்ணி வருந்தினன். பல குதிரைகள் கூரிய முனையையுடைய

அம்புகள் தம் உடலைத் துளைத்து உண்டாக்கிய புண் களினால் தோன்றிய வலியைப் பொறாமல் செவிகளைச் சாய்த்துக்கொண்டு உணவை யுண்ணாமல் வருந்திய காட்சி அவனது அகக்கண்ணில் தோன்றி வருத் திற்று. இவ்வாறு மன்னன் இரவு முழுதும் எண்ணி எண்ணிப் பொழுதைக் கழித்தனன்.

இரவெல்லாம் இருளிற்கிடந்து உறங்கிய உலகைத் தட்டி யெழுப்புவான் போன்று கதிரவன் கீழ்த்திசை யில் தோன்றினன். காலத்தை யெதிர்நோக்கியிருந்த காவலனும் தன்னுடைய தானைகளோடு பகைவரை யெதிர்த்தான். போர்க்களத்திற் புகுந்து மாற்றார் படை களைக் கொன்று குவித்தான். உயிரை மதியாத அவ னுடைய வீரர்கள் மாற்றார்மீது கூற்றெனப் பாய்ந்து பொருதனர். அவர்களை யெதிர்த்து நிற்கும் திறனற்ற தெவ்வர் இனி நம்மால் வெல்ல முடியாது என உணர்ந் தவராய்ப் புறமுதுகிட்டு ஓடினர். மன்னன் வாகை சூடினன். மற்றையோர் உவகையுற்றனர். எங்கணும் கடலொலியையும் விஞ்சும்படி பேரொலி யெழுந்தது. வெற்றி முரசங்கள் முழங்கின. யாவரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர். முன்னாள் இரவில் வருத்தமும், எண்ணங்களும் மிக்குத் துயில் நீத்துப் பஞ்சணையில் சாய்ந்திருந்த மன்னவன், இந்நாளில் மார்பகத்தே விழுப்புண்பெற்று, வெற்றியுற்ற களிப்பினால் இனிய துயிலை மேற்கொண்டான்.

மன்னன் நிலை இவ்வாறு இருக்க அவன் மனைவியின் நிலையை நோக்குவோம்: மாயோனைப் போல் விளங்கும் கருநிற மேகம் உலகை வளைந்து மழையைப் பொழிந்ததைக் கண்ட மன்னன் மனைவி, கார் காலத்தில் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற தன் கணவன் இன்னும் வாராத காரணம் யாதோ,

என வாட்டமுற்ருள். கடல் நீரைப் பருகியதால் கருமை நிறம் பொருந்தி மின்னலோடு விளங்கு கின்ற மேகம், திருமகளை மார்பில் தரித்த திருமா லுக்கு நிகராகக் கூறப்பட்டது. இதனை •

"நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை."

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

[அ. பொ : நனந்தலை - அகன்ற இடம் ; நேமி - சக்கரம் ; மா - திருமகள் ; கோடு - மலை ; எழிலி - மேகம்.]

கணவன் வாராமையால் கலங்கிய அக் காரி கைக்கு அவளைச் சூழ்ந்து விளங்கும் பெருமுது பெண்டிர் பல ஆறுதல் மொழிகள் கூறியும், அவளது கலக்கத்தைப் போக்க இயலாததால், விரைந்து எழுந்து அம்மூதூரின் மருங்கில் உள்ள மாயோன் கோயிலை யடைந்தனர். அவ்விறைவன் முன்னிலையில் முல்லை மலரும், செந்நெல்லும் தூவி விரிச்சியை (நற்குறியையுணர்த்தும் சொல்) விரும்பி நின்றனர்.

அந்நிலையில், ஆய்ச்சியர் தமது இல்லங்களில் தாய்ப் பசுக்களைக் காணுது வருந்திய கன்றுகளை நோக்கி, அவற்றின் வருத்தத்தைப் போக்கும் பொருட்டு "நும் தாயர்களை ஆயர்கள் ஒட்டிக்கொண்டு விரைந்து வருகின்றனர். வருந்தாதீர்" எனக் கூறிய சொற்களை விரிச்சியாகக் கொண்டு அப்பெருமுது பெண்டிர் அகமகிழ்ந்தனர். அவர்கள் அரசியின் இருக்கையை யடைந்து அவள்பால் தாம் கேட்ட நற்சொல்லைக்கூறி, "மன்னன் விரைந்து வருவான்"

என உணர்த்தினர். அவ்வாறு கூறிய பின்னரும் அம்மங்கை நல்லாள், தனது மனத்துயரை மறந்தா ளல்லள்.

இஃது இவ்வாறிருக்க, பாடி வீட்டில் தங்கியிருந்த மன்னன் கார் காலத்தின் வருகையைத் தான் கண்ட எழில்மிகு காட்சிகளின் மூலம் உணர்ந்தான். காயா என்னும் செடிகள் மையைப் போன்று கருமை நிறம் பொருந்திய மலர்களைக் கொண்டு விளங்கின. கொன்றைகள் பொன் போன்ற மலர்களோடு பொலிந்தன. வெண்காந்தள் மொட்டுக்கள் அகங்கைபோல அலர்ந்தன. இதழ்கள் நிறைந்த தோன்றி மலர்கள் குருதிபோன்று செந்நிறம் பெற்றுத் திகழ்ந்தன. இத்தகைய இயற்கை யெழில் ததும்பும் இனிய காட்சிகள் மன்னனுக்குக் கார் காலத்தையும், அக்காலத்தில் மீண்டு வருவதாகத் தன் இல்லாளிடம் கூறிய தன்மையையும் நினைவுபடுத்தின. கார்ப்பருவ வருகையைக் குறிக்கும் காட்சிகளை ஆசிரியர் நப்பூதனார்,

"செறியிலைக் காயா அஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி."

என்னும் அடிகளின்மூலம் அறிவிக்கின்றார்.

[அ. பொ : முறி - தளிர்; இணர் - பூங்கொத்து ; கோடல் - காந்தள் ; கால - சொரிய.]

மன்னன் உடனே தனக்கு உறுதுணையாய் நின்று, பகைவரை வென்ற வெற்றிக் களிப்புடன் நின்ற தானையை நோக்கினான். மன்னன் கருத்தைக் குறிப்பால் உணர்ந்த தானைத் தலைவர்கள், நாடு திரும்புதற்குரிய செயல்களில் நாட்டம் கொண்டனர்.

படை வீரர்கள் வெற்றிக் கொடி யேந்தி, கொம்பும் சங்கும் முழக்கி நாடு நோக்கிச் சென்றனர்.

மன்னர் ஏறிச் சென்ற தேரிற் பூட்டப்பட்ட குதிரைகள் வரகுப் பயிர் செழித்தோங்கி விளர்ந்துள்ள வயற்பகுதிகளையும், வள்ளிக்காட்டையும் கடந்து விரைந்துசென்றன. அவ்வாறு விரைந்துவருகின்ற தேர்களிற் கட்டப்பட்ட மணிகளின் ஒலியானது வருத்தமுற்றிருந்த மன்னன் மனைவியின் செவிகளிற் பட்டது. அவள் கதிரவன் வரவால் களித்த கமலம் போலக் களிப்புற்ருள். வெற்றியோடு நகர்திரும்பும் மன்னனை மக்கள் வாழ்த்தி வரவேற்றனர். நாடெங்கும் வெற்றிவிழாக் கொண்டாடப்பட்டது. அவன் இல்லம் சேர்ந்து மழையின் வரவை எதிர்நோக்கி யிருந்த சாதகப்புள் போன்று, தனது வரவை யெதிர்நோக்கி யிருந்த மனைவியின் துயரைப் போக்கினுன்.

இத்தகைய அரிய செய்திகளை யறிவிக்கும் முல்லைப் பாட்டு போன்ற மற்றைய இலக்கியங்களை யும் படித்து இன்புறுவோமாக.

# 2. எட்டுத்தொகை

## (1) அகநானூறு

பண்டைய நாளில், நமது தமிழகத்தில் வாழ்ந்த அறிஞர்கள் நிலத்தை இயற்கையை யொட்டி ஐவகை யாகப் பிரித்தனர் என்பது முன்னரே கூறப்பட்டது. இவ்வைவகை நிலங்களையும், அந்நிலங்களில் உறைந்த மக்களையும் பொருள்களையும் அடிப்படையாய்க் கொண்டு நூல்கள் இயற்றுவதில் செந்தமிழ்ப் புலவர் சிறந்து விளங்கினர்.

முன்னாளில் தமிழில் தோன்றிய நூல்கள் யாவும் **அகப்பொருள், புறப்பொருள்** என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும்; அகப்பொருள் என்பது பண்டைக் காலத்தில் நம் நாட்டில் வாழ்ந்த மக்களது இல்வாழ்வின் இயல்பைப் பற்றி யுணர்த்துவதாகும். அது குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்து வகையான நிலங்களுக்கு உரிய ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பாடப்படு வதாகும்.

**அகநானூறு :**

நம் செந்தமிழ் மொழியில் பண்டு எழுந்த நூல்களிற் பல அகப் பொருளை உரைப்பனவே. **எட்டுத்தொகை** நூல்களில் **நற்றிணை, குறுந் தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித் தொகை** என்னும் நூல்கள் அகப்பொருள் பற்றியன வேயாகும். அவற்றில் அகநானூறு என்னும் நூல் அகப்பொருளைப் பற்றிய நானூறு செய்யுட்களைக் கொண்டதாகும். அது நீண்ட அடிகளையுடைய

செய்யுட்கள் கொண்டு அமைந்துள்ளதால் 'நெடுந் தொகை' எனவும் கூறப்படுகின்றது. அகப் பொருளைப்பற்றிப் பல புலவர்களால் இயற்றப்பட்ட நானூறு செய்யுட்கள் மதுரையைச் சேர்ந்த உப்பூரி குடிகிழார் மகனை உருத்திரசன்மன் என்பவரால், ஒரு நூலாகத் தொகுக்கப் பெற்று 'அகநானூறு' என்னும் பெயரைப் பெற்றது.

இந்நூல் களிற்றியானைநிரையெனவும், மணி மிடைபவளம் எனவும், நித்திலக் கோவை யென வும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 'களிற்றியானைநிரை' யென்பது முதல் நூற்றிருபது பாக்களைக் கொண்டது. 'மணிமிடை பவளம்' அடுத்த நூற்றெண்பது பாக்களைக் கொண் டது. 'நித்திலக் கோவை' கடைசி நூறு பாக்களைக் கொண்டு இலங்குகின்றது. இனி இந்நூலில் உள்ள சில செய்யுட்களின் மூலம் பண்டைத் தமிழரின் இல் வாழ்க்கை நெறியை உணர்வோம்:

## குறிஞ்சி

**மாரிக்கால அந்தி வருணனை:**

ஒரு சிறிய குன்றினை யடுத்துள்ள சிற்றூரில் வாழ்கின்ற பெண் ஒருத்தி, ஒருநாள் மலைச்சாரலில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, அங்கு ஓர் அழகிய ஆடவனைக் கண்டாள். அவனும் மலைச் சாரலில் நின்ற அம்மங்கையைக் கண்டான். அவர் கள் இருவரும் ஒருவரையொருவர் மனமார விரும்பி னர். அவர்தம் நட்பு வளர்ந்தது. ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ முடியாது என அவர் எண்ணினர்.

பின்பு மலைநாட்டிற்குத் தலைவனான அவன் தனது பெற்றோரையனுப்பி அப்பெண்ணை மணம் பேச ஏற்பாடு செய்தான். பெண்ணின் பெற்றோர் களும், அத்தலைவனுக்குத் தம் பெண்ணைக் கொடுக்க இசைந்தனர். அச்செய்தியைக் கேள்வியுற்ற அப்பெண்ணின் தோழி மிகமிக மகிழ்ச்சியுற்றாள். அவளது உள்ளம் அளவற்ற இன்பத்தில் ஆழ்ந்தது. வெப்பத்தால் வறண்டுபோன பெரிய குளங்கள் நிறை யும்படி பெருமழை ஒருநாள் இரவு பெய்ய, மழையின்றி வாடிய மக்கள் மறுநாட் காலையில் உறக்கம் நீங்கி விழித்தபோது, குளமும் குட்டைகளும் நீரால் நிரம்பி யிருப்பதைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைவார் கள். அவ்வாறு அவர்கள் அடைகின்ற மகிழ்ச்சியை யெல்லாம் ஒன்றாகக் கூட்டியது போன்ற பெரு மகிழ்ச்சியைத் தோழியடைந்தாள். இன்பம் ததும் பும் அவ்வினிய செய்தியைத் தலைவியிடம் பின் காணுமாறு உரைக்கின்றாள் :

"மாரிக்காலத்தில் அந்திப் போதில் மலரும் பித்திகம் என்னும் மலரினது மணம் தங்கிய அரும் பின் பின்புறத்தைப் போலச் சிவந்த கண்களையும், அழகிய மேனியையும் உடையவளே, உயர்ந்த மலைக் குத் தலைவன் மணம் பேசத் தன்னுடைய உறவினரை அனுப்பியுள்ளான் என்ற செய்தியானது முதல் நாள் இரவு பெய்த பெருமழையால் வற்றிய குளங்கள் நிரம்ப, மறுநாள் காலையில் விழித்தெழுந்தபோது அதனையுணர்ந்து இன்பமடையும் மக்களது மகிழ் வைக் காட்டிலும், மிகுந்த மகிழ்ச்சியை எனது உள்ளத்திற்கு அளித்தது," என அவள் தனது மன நிலையைக் கூறுகின்றாள். இதனை,

“ மலிபெயல் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயல்அரு நிலைஇய பெயல்ஏர் மணமுகைச்
செவ்வெரி நுறழும் கொழுங்கடை மழைக்கண்
தளிரேர் மேனி மாஅ யோயே !
நாடுவறங் கூர நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய பைதறு காலைக்
குன்றுகண் டன்ன கோட்ட யாவையும்
சென்றுசேக் கல்லாப் புள்ள உள்ளில்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோர் உவந்த உவகை யெல்லாம்
என்னுட் பெய்தந் தற்றே சேணிடை
ஓங்கித் தோன்றும் உயர்வரை
வான்றோய் வெற்பன் வந்த மாறே.”

[**அரும்பொருள் :** கலித்த - தழைத்த ; பித்திகம் - ஒரு மலர் ; முகை - அரும்பு ; செவ்வெரிந் உறழும் - சிவந்த பின் புறத்தை யொக்கும் ; மாயோள் - மாநிறம் பொருந்தியவள் ; வறம் கூர்தல் - பஞ்சம் மிகுதல் ; நாஞ்சில் துஞ்சல் - நாடு மழை யின்மையால் பஞ்சமுறக் கலப்பைகள் உழவுத் தொழிலற்றுக் கிடத்தல் ; பைது அறுகாலை - பசுமை நீங்கிய காலம் ; கோட்ட - கரைகளையுடைய ; சென்று சேக்கல்லாப்புள் - நீரில்லாத கார ணத்தால் சென்று தங்குதல் இல்லாத தன்மையுடைய பறவைகள் ; பெரும்பெயல் - பெரிய மழை ; ஏமம் - இன்பம் ; வெற்பன் - மலைக்கு உரியவன் ; வந்தமாறு - வந்த தன்மை ; என்றூழ் வியன்குளம் - வெப்பம் பொருந்திய அகன்ற குளம்.]

என்னும் செய்யுள் விளக்குகின்றது. இச்செய்யுள் பழங்காலத் தமிழரின் கற்பு மணத்தை விளக்குவதா கும். இலக்கியத்தில் இந்நிகழ்ச்சி குறிஞ்சித் திணை எனப்படும்.

இச்செய்யுள் கபிலர் என்னும் புலவர் பெரு மானல் பாடப்பட்டது. கபிலர் குறிஞ்சித் திணை பற்றிப் பாடுவதில் வல்லவர் ; கொடை வள்ளல் பாரி

யின் உயிர் நண்பராக விளங்கியவர். இவர் பாடிய செய்யுட்கள் மற்றைய சங்ககால நூல்களிலும் உள்ளன.

## பாலை

### 1. 'கானகத்தில் கண்ட கனவு':

பண்டைக் காலத்தில் ஆடவர் பொருள் ஈட்டுவதற்காகச் செல்லுதல் வழக்கம். அவ்வழக்கப்படி ஆண்மகன் ஒருவன் தன் ஆருயிர் மனைவியைப் பிரிந்து, பொருள் ஈட்டுவதற்காகச் சென்றான். அவன் சென்ற வழியானது மிகவும் கொடிய காட்டுப் பாதையாகும். அவ்வழியில் நிறைந்துள்ள மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால் எழுகின்ற தீப்பொறி, மலை போன்று குவிந்துள்ள சருகுகள் தீப்பற்றுமாறு செய்யும். பின்பு காற்றினது வேகத்தால் உலர்ந்து போன ஊகம்புல்லின் மீது அத்தீ படர்ந்து, காற்றின் வழியே விரைந்து சென்று, கானகம் எங்கும் பரந்து காணப்படும்.

அவ்வாறு தீயானது காடெங்கும் விரைந்து பரவுவதால் அதைக் கண்டு, அவ்வழியே செல்கின்ற வணிகக் கூட்டத்தினர் அச்சமுற்று அலறி ஓடுவர். அக்காட்டின் மற்றொருபுறம், சினங்கொண்ட புலியைக் கண்டு அஞ்சிய யானை அங்கும் இங்கும் திரிந்து கொண்டிருக்கும். அத்தகைய கொடிய பாதையில், செல்லும் அவன், பிரிவாற்றாமல் வருந்திய தன் இல்லாளை நினைத்து வருந்தினன். அவ்வழியில் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து, தன் மனைவியின் துன்ப நிலைகுறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்த அவன் அப்படியே கண்ணயர்ந்து உறங்கினான். அவனது

அகக் கண் முன்பு ஓர் அரிய காட்சி தோன்றியது. தனது மனைவி, தலையைக் குனிந்து தனது கால் பெருவிரலால் நிலத்தைக் கீறிக்கொண்டு வருத்தம் உடையவளாய் நிற்பதைக் கண்டான்! அவளது வருத்தத்தைப் போக்க நினைத்து, "நீ என்னிடம் சினம் கொள்ளுவது எக்காரணம் பற்றி?" யென அன்போடு வினவினான். அவளது நெற்றியில் அரும்பிய வியர்வையைத் தன் கைகளால் துடைத்தான். இந்நிலையில் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்த அவன் கண்கள் திடீரென்று விழித்தன. தான் அது வரையில் கண்டது கனவு என்பதை யறிந்தான். பின்பு அத்தலைவன், பொருள் ஈட்டுவதற்காகச் சென்று, அக்காரியம் நிறைவேறியதும் தனது ஊருக்குத் திரும்பினான்.

தன்னை யெதிர்நோக்கியிருந்த மனைவியைக் கண்டு மகிழ்ந்தான். தான் சென்ற வழியில் கண்ட காட்சிகளை யெல்லாம் அவளுக்கு விரித்துரைத்தான். அப்போது அப்பெண் தனது கணவனிடம், "பெண்களுக்குத் துன்பம் செய்தல் கூடாது என்ற பெரியோர் மொழியையும் பழித்து, என்னைத் துன்பத்திற்கு ஆளாக்கிச் சென்ற நீர், இடைவழியில் என்னைப் பற்றி நினைத்தீரோ?" என்று அவனைக் கேட்டாள். அப்போது அவளது கணவன் நகைத்து, தான் இடைச்சுரத்தில் துயின்றபோது கனவில் அவளைக் கண்டதையும், விழித்து நோக்கியபோது தன் முன்பு அவள் இல்லாமையால் கனவென்று அறிந்ததையும் உரைத்து, அவள் வருத்தத்தைப் போக்கினான். இச் செய்தியைக் கீழ்வரும் செய்யுளால் அறியலாம் :

"ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்(து)
உள்ளியும் அறிதிரோ எம்மென யாழநின்

முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க
நோய்முந் துறுத்து நொதுமல் மொழியனின்
ஆய்நல மறப்பெனோ மற்றே சேண்இகந்து
ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி யொண்பொறி
படுஞெமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளிபுல் மீமிசை வளிசுழற் றுறுஅக்
காடுகவர் பெருந்தீ யோடுவயின் ஓடலின்
அதர்கெடுத் தலறிய சாத்தொ டொராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழத்
தினந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன் றவிர்சுடர் மான்றுட் பட்டெனக்
கட்படர் ஓதி நிற்படர்ந்து உள்ளி
அருஞ்செல வாற்று ஆரிடை ஞெரேரெனப்
பரந்துபடு பாயல் நவ்வி பட்டென
இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்டு
இன்னகை யினைய மாகவும் எம்வயின்
ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுதல் நீவி
நறுங்கதுப் புளரிய நன்னர் அமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற உலமரல்
போற்று யாகலின் புலத்தியால் எம்மே.''

இவ்வழகிய செய்யுளை இயற்றியவர்—**மதுரையைச் சேர்ந்த செங்கண்ணனுர்** என்ற புலவராவர்.

[அரும்பதம்: படர்தல் - செல்லுதல்; உள்ளியும் - நினைத்தும்; முள்எயிறு - முள்ளைப் போன்று கூர்மையான பற்கள்; துவர்வாய் - சிவந்த நிறம் பொருந்திய வாய்; நொதுமல் - (உண்மைக்குப்) புறம்பான சொல்; நலம் - அழகு; சேண் - நெடுந்தூரம்; இகந்து - கடந்து; கழை - மூங்கில்; ஞெமல் - சருகு; பொத்தி - மூண்டு; வளி - காற்று; சாத்து - வணிகர் கூட்டம்; மதர்புலி - செருக்குற்ற புலி; வேழம் - யானை; நனம் தலைப்பெருங்காடு - அகன்ற இடத்தையுடைய பெரிய காடு; ஆரிடை - செல்லுதற்கு அரிய வழி; ஞெரேரென - திடீரென்று;

பாயல் - படுக்கை ; நவ்வி - பெண்மான் ; நுதல் நீவி - நெற்றியைத் தடவி ; கதுப்பு - கூந்தல் ; நன்னர் அமையம் - நல்ல நேரம் ; வறுங்கை - வெறுங்கை ; வாய் அல் கனவு - உண்மையல்லாத கனவு ; புலத்தல் - கோபம் கொள்ளுதல் ; எம்மே - எம்மை.]

## 2. குற்றம் புரிந்தவர் யார் ?

உயர்ந்த மலை நாட்டிற்குத் தலைவனான ஆண்மகன் ஒருவன், தன் மனைவியைப் பிரிந்து, பொருளீட்டும் பொருட்டு நெடுந்தொலை சென்றான். அவன் சென்ற நெறியானது கொடிய காடு சூழ்ந்தது. அக்காடு அச்சமூட்டும் இயல்பையுடையது. அக்காட்டில் இருப்பை மரங்கள் நிறைந்திலங்கும். அம்மரங்களில் பூனையின் பாதத்தைப் போல் விளங்குகின்ற குவிந்த அரும்புகள் நிறைந்திருக்கும். இருப்பையின் மலர்கள் தந்தம் போல் வெண்மையாக இருக்கும். அவற்றைக் கோடை காலக் காற்றானது தனது வேகத்தால் உதிரும்படி செய்யும். நிலத்தில் உதிர்ந்து கிடக்கும் அம்மலர்களைக் கரடிக் கூட்டமானது உண்ணும். இக் கரடிகளைக் கண்டு அஞ்சிய கருங்குரங்கு, மூங்கிலின்மீது பாயும். அப்பொழுது மூங்கிலில் விளைந்த வெண்மை நிறம் பொருந்திய நெற்கள் வெப்பம் மிகுந்த பாறையில் விழுந்து, நகத்தை நெரிப்பது போன்ற ஓசையுடன் பொரிந்து விடும். அத்தகைய கொடிய வெப்பம் பொருந்திய வழியில் சென்ற தன் கணவனை நினைத்து, அவனுடைய இல்லாள் ஏங்கினாள் ; உடல் மெலிந்தாள். அவளது உடல் மெலிவுற்றதன் காரணமாகத் தோள்களில் அவள் அணிந்திருந்த தோள் வளையங்கள் நெகிழத் தொடங்கின. இவ்வாறு இவள் மெலிவதைக்

கண்ட இவள் தோழி, இத்தகைய நிலை நேரும் என்று அறிந்தும் பிரிந்து சென்றவனைக் குறித்துத் தூற்றத் தொடங்கினள். அந்நிலையில், அப் பெண் மகள் தன் தோழியிடம், "தோழி, என் நெஞ்சம் மகிழும்படி இன் சொற்கள் பல கூறி, அன்பு கலந்த உள்ளத்தவராகிய என் கணவர் பொருளீட்டும் தொழில் நிறைவேறியதும் மீண்டு வருவர். அவர் வாராமையைக் குறித்து நான் மெலிவதாக நீ வருந்த வேண்டா. கடுமையான காடுகள் பலவற்றைக் கடந்து சென்ற அவர் குற்றம் உடையவர் ஆகார். என் தோள்களே குற்றம் புரிந்தவை. தம்மை விரும்பித் தங்கிய வளைகளை, அத் தோள்கள் பற்றிக் கொள்ளாமல். நெகிழ விட்டன. ஆகையால் என் தலைவர் குற்றம் உடையவர் அல்லர்," என்று கூறு கின்றாள். அவளது கணவன், பலமுறை பிரிந்து சென்று, மீண்டும் தனது இல்லம் சேரும் போதெல் லாம், அவளிடம் தான் சென்ற வழியின் தன்மையை யும், கண்டகாட்சிகளையும் விவரித்துரைப்பது வழக்கம். ஆகவேதான் அவள் கடுமையான கான கத்தின் இயல்பைக் குறித்துத் தன் தோழியிடம் கூறினாள். இதனை,

" நெஞ்சு நெகிழ்தகுந கூறி அன்புகலந்து
அறாஅ வஞ்சினம் செய்தோர் வினைபுரிந்து
திறம்வே றுகல் எற்றென்று ஒற்றி
இனைத லான்றிசின் நீயே சினைபாய்ந்து
உதிர்த்த கோடை உட்குவரு கடத்திடை
வெருக்குஅடி யன்ன குவிமுகிழ் இருப்பை
மருப்புக் கடைந்தன்ன கொள்ளை வான்பூ
மயிர்க்கால் எண்கின் ஈரினம் கவர
மைபட் டன்ன மாமுக முசுக்கலை
பைதறு நெடும்கழை பாய்தலின் ஒய்யென

வெதிர்படு வெண்ணெல் வெவ்வறைத் தாஅய்
உகிர்நெரி யோசையிற் பொங்குவன பொரியும்
ஓங்கல் வெற்பிற் சுரம்பல இறந்தோர்
தாம்பழி யுடையர் அல்லர் நாளும்
நயந்தோர்ப் பிணித்தல் தேற்ரு வயங்குவினை
வாளேர் எல்வளை நெகிழ்த்த
தோளே தோழி தவறுடை யவ்வே.''

[அரும்பதம் : ஒற்றி - ஆராய்ந்து ; உட்குவரு கடம் - அஞ்சத்தக்க காடு ; வெருக்கு - பூனை ; குவிமுகிழ் - குவிந்த அரும்பு ; மருப்பு - யானைத் தந்தம் ; எண்கு - கரடி ; முசுக்கலை - ஆண் குரங்கு ; வெதிர் - மூங்கில் ; வெவ்வறை - வெம்மை மிக்க பாறை ; உகிர் நெரி யோசை - நகத்தை நெரிக்கும் ஓசை ; ஓங்கல் வெற்பு - உயர்ந்த மலை ; சுரம் - காடு ; நயந்தோர் - விரும்பியவர் ; தேற்ரு - அறியாத ; ஏர் - அழகு ; எல்வளை - ஒலி பொருந்திய வளை.]

என்னும் செய்யுள் உணர்த்துகின்றது. இச் செய்யுள் **பெருங் கடுங்கோ** என்ற சேர மன்னரால் இயற்றப் பட்டது. இவர் பாலைத்திணையைப் பற்றிப் பாடும் ஆற்றல் மிக்கவராதலின் பாலை பாடிய பெருங் கடுங்கோ எனவே கூறப்படுகிருர்.

இச் செய்யுளில் இருப்பையின் குவிந்த அரும்பு களுக்குப் பூனையின் பாதங்களும், அதன் வெண் ணிறம் பொருந்திய மலர்களுக்கு யானையின் தந்தமும், வெப்பம் பொருந்திய பாறையில் விழுந்து பொரியும் மூங்கில் நெல்லின் ஓசைக்கு நகங்களை நெரிக்கின்ற ஓசையும் ஆசிரியர் பெருங் கடுங்கோ வினல் உவமையாக எடுத்தாளப்பட்ட இயல்பு சிறந்து உள்ளது. தலைவன் சென்ற கானகம் கொடிய வெப்பத்திற்கு உறைவிடமானது என்பதைத் தலைவி கூறு முகமாக அமைத்து ஆசிரியர் கடுங்கோ அழகு பட விளக்கியுள்ளார்.

## முல்லை

### 1. கார் காலத் தோற்றம் :

ஆண்டகை யொருவன், தனது அருமை மனைவியைப் பிரிந்து நெடுந் தொலை சென்று பொருளீட்ட விரும்பினான். பொருள் ஈட்டும் பிரிவினை மேற்கொள்ள எண்ணிய அவன், ஒரு நாள் தன் மனையாளிடம் மிகவும் அன்புடையவனாகப் பல நகை மொழிகள் கூறிக் களிப்புற்றிருந்தான். ‘மற்றைய நாட்களின் மகிழ்ச்சியைவிட, அன்று தன் கணவனது மகிழ்ச்சி மிகுந்திருப்பது, ஒருவேளை தன்னைப் பிரிந்து செல்வதற்காக இருக்குமோ? என அவள் எண்ணி அஞ்சினாள். அத்தலைவன் அவள் அருகில் அமர்ந்து, “நங்காய், மக்கள் அடையக்கூடிய உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனுள் சிறந்தது பொருளே; பொருள் இருந்தால் அறத்தைச் செய்ய முடியும்; இன்பத்தையும் எய்த முடியும். பொருளற்றவர் இவ்வுலகில் எதனையும் எய்த முடியாது என்பது உனக்குத் தெரியாத செய்தி அன்றே? ஆகையால் நமது வாழ்வு அற வழியில் சிறப்புற நடைபெற வேண்டுமாயின் அதற்குப் பொருள் மிக அவசியமாகும். அப்பொருளை ஈட்டி விரைவில் திரும்புவேன். கார் காலம் தொடங்கும் நேரத்தில் திரும்பி வந்து விடுவேன்,” என்று அன்பு தோன்றக் கூறினான். அப்பெண்ணணங்கு தன் கணவனைப் பிரிவதற்கு முதலில் வருந்தினளாயினும், பின்னர் அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினாள். அவள் தன் கணவன் தன்னைப் பிரிந்த பின்னர்த் தனக்கு நேர்ந்த வருத்தங்களை யெல்லாம் பொறுத்துக்

கொண்டு, கார் காலத்தின் வருகையை எதிர் நோக்கி யிருந்தாள்.

காலச் சக்கரம் கடுகிச் சுழன்றது. பருவம் மாறிற்று. கார் காலம் வருவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டன. முற்றத்தில் படர்ந்திருந்த முல்லைக் கொடியில் அரும்புகள் தோன்றின. கொன்றை மரங்கள் அரும்பு விட்டு மலரத் தொடங்கின. இரும்பைத் திரித்து விட்டாற் போல விளங்குகின்ற பெரிய கொம்புகளை உடைய புள்ளி மான்கள், பள்ளங்களில் துள்ளிக் குதித்து ஓடின. அகன்ற காடுகள் சூழ்ந்த முல்லை நிலப் பகுதியில் நீரில்லாமல் மக்களும், மாக்களும் வாடிய வருத்தம் நீங்க, மேகக் கூட்டங்கள் விரைந்து வந்து மழைத் துளிகளைச் சிதறின. இச் செயல்கள் எல்லாம் கார் காலத்தின் வருகையைத் தலைவிக்கு உணர்த்தின. தன் கணவனை யெதிர் நோக்கி இதுவரை ஆற்றியிருந்த அவள் உள்ளம், கார் காலம் தொடங்கியும் கணவன் வாராமையால் கலக்கம் உற்றது. அந் நிலையில் அவள் தோழி அவளுக்கு ஆறுதல் கூறத் தொடங்கினாள். தோழி அப்பெண் மகளிடம், "ஆராய்ந்து எடுத்த சிறந்த வளையல்களை அணிந்த அரிவையே! கார் காலத்தின் வருகையைக் குறிக்கும் இக் குறிகளைக் கண்டு நீ கலங்காதே! எழில் மிக்க பொழிலில் தம் துணையொடு தேன் உண்ணுகின்ற வண்டுகள், தனது தேரின் மணி யொலிப்பதால் அஞ்சும் என எண்ணி, குதிரைகளை மெல்லெனச் செலுத்தி, மணிகளின் நாவை ஒலி செய்யாதவாறு கட்டித் தேரை நடத்தி வருகின்ற உன் கணவன், விரைந்து வருவான்," எனக்கூறி அவளைத் தேற்றினாள். இதனை,

“ முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரல்அவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானம் கதழ்உறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம் ;
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தட்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவைநின் மாண்நலம் படர்ந்தே.”

என்னும் இச் செய்யுள் குறிப்பிடுகின்றது. இதனை இயற்றியவர் ‘ குறுங்குடி மருதனார் ’ என்ற புலவராவர்.

[அரும்பதம் : வைந்நுனை - கூரிய நுனி ; இல்லம் - தேற்றாமரம் ; பைங்கால் - பசுமையான அடி ; மென்பிணி - மென்மையான அரும்புகள் ; மாஇரு மருப்பு - கரிய பெரிய கொம்பு ; அவல் - பள்ளம் ; புலம்பு - வருத்தம் ; உறை - மழைத் துளி ; கறங்கு இசை - ஆரவாரிக்கின்ற இசை ; அமன்ற - நெருங்கிய ; மாண் நலம் - சிறந்த அழகு ; படர்ந்து - நினைத்து ; சுவல் - பிடரி மயிர் ; குரங்கு உளை - வளைந்த தலையாட்டம், அதாவது, தலையில் அணியப்படும் மேல் நோக்கி நிற்கும் குஞ்சம் ; வாங்கு வள் - இழுக்கின்ற கடிவாளம் ; பொங்கர் - சோலை ; தாது உண் பறவை - தேனை யுண்ணுகின்ற வண்டு ; பேதுறல் - மயங்குதல்.]

**2. அரிவையின் சிற்றூர் :**

ஓர் ஆண்மகன் தான் மேற்கொண்ட ஒரு செயலை முடிப்பதற்காக வேற்று நாடு செல்ல நேரிட்டது. அப்போது அவன் தன் இல்லாளிடம், குறிப்பிட்ட காலத்தில் வருவதாகக்கூறிச்சென்றான். சென்ற அவன், தான் கருதி வந்த காரியத்தை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பினான். அவனது தேர், பாகனாற் செலுத்தப்பட்டு விரைந்து வந்துகொண்டிருந்தது. தன் மனைவி இருந்த சிற்றூரின் காட்சி, அவனது அகக்கண் முன்பு தோற்றமளித்தது. சிறிய இலைகளையுடைய நெல்லியின் காயைப் போல் விளங்குகின்ற கண்களையும், கூர்மையான மயிரையும் உடைய முயல்கள், வரகினது குருத்தைத் தின்று, கொடிகளுக்கு இடையே உறங்கிப் பின்பு விழித்தெழுந்து, வீட்டு முற்றத்தில் வைக்கப்பட்ட சால்களில் நிறைந்திருக்கும் நீரைப் பருகும் முல்லை நிலப் பகுதிகள் பல சூழ்ந்து விளங்கும் சிறிய ஊர்களில் உள்ள வேடர்கள், வேட்டையாடிக் கொண்டுவந்த மானை அறுத்து உண்ணும் இயல்பினையுடைய அழகிய காட்டின் நடுவில் அமைந்துள்ள சிற்றூரின் தோற்றமும், அச்சிற்றூரில் ஓர் இல்லத்தில் அமர்ந்து கணவனின் வருகையை எதிர் நோக்கிக் கவலையுறும் காரிகையின் தோற்றமும் அவனது அகக்கண் முன் தோன்றின ; உடனே தான் குறிப்பிட்டுக் கூறிய பருவம் நெருங்கியதை உணர்ந்த அவன் பாகனை நோக்கி, "பாகனே, அழகிய காட்டுப் பகுதியில் இருக்கும் நமது சிற்றூர் இன்னும் நெடுந் தொலைவில் உள்ளது ; ஆகையால் விரைந்து செல்லல் வேண்டும். குறித்த நேரத்திற் செல்லாவிடில் அமுதமனைய என் ஆருயிர் மனைவி மிகவும்

வருந்துவாள். குதிரைகளை விரைந்து செலுத்துவாயாக!'' என்று கூறினான். இச் செய்தியை,

'' சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன
குறுவிழிக் கண்ண கூரலங் குறுமுயல்
முடந்தை வரகின் வீங்குபீள் அருந்துபு
குடந்தையஞ் செவிய கோட்பவர் ஒடுங்கி
இன்றுயில் எழுந்து துணையொடு போகி
முன்றில் சிறுநிறை நீர்கண் டுண்ணும்
புன்புலந் தழீஇய பொறைமுதற் சிறுகுடித்
தினைக்கள் ளுண்ட தெறிகோல் மறவர்
விசைத்த வில்லர் வேட்டம் போகி
முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டும்
காமர் புறவி னதுவே காமம்
நம்மினும் தான்தலை மயங்கிய
அம்மா அரிவை உறைவின் ஊரே.''

என்னும் செய்யுள் உணர்த்துகின்றது. இதனையியற்றியவர் இடைக்காடனார் என்ற புலவர்.

[அரும்பதம் : கூரல் - கூர்மையான மயிர் ; முடந்தை வரகு - வளைந்து கிடைக்கின்ற வரகு ; பீள் - குருத்து ; கோள்பவர் - காய்களைக் கொண்ட கொடி ; முன்றில் - வீட்டின் முற்பகுதி, முற்றம் ; சிறுநிறை - சிறிய சால்கள் ; புன்பலம் - புன்செய் நிலம், முல்லைப்பகுதி; வேட்டம் போதல் - வேட்டையாடுதல்; படப்பை - தோட்டம் ; புல்வாய் - மான் ; காமர்புறவு - அழகினையுடைய காடு ; கெண்டும் - அறுத்து உண்ணுகின்ற.]

## நெய்தல்

**பரதவன் மகள் :**

கடல்வளம் செறிந்த நெய்தல் நிலத்தில் அமைந்துள்ளது ஒரு சிற்றூர் ; நிறைந்த ஆழமுடைய கடலில் இருந்து எடுத்த முத்துக்களை, அகன்ற கரையில் வைத்துப் பரதவர் பகுத்துக்கொள்ளும் அச்சிற்றூ

ருக்குத் தலைவனாக ஒரு பரதவன் இருந்தான். அவனுக்கு எழில் நலம் மிக்க ஒரு பெண் இருந்தாள். அவள் ஒருநாள் மணல் நிறைந்த கடற்கரையில் நண்டைத் துரத்தி விளையாடிக்கொண்டிருந்தாள். அவ்வமயத்தில் அங்கு வந்த ஓர் ஆடவன், செருந்தி மலர்களைத் தனது கூந்தலில் சூடியிருந்த அக்காரிகையைக் கண்டான். அழகு மிக்க அவளை மணக்க விரும்பினான். நெய்தல் நிலத்திற்குத் தலைவனாகிய அவள் தந்தை பெரும் பொருளையும் அணிகலன்களையும் பரியமாகக் கொடுத்தாலும் அவளைத் தனக்குக் கொடுப்பானோ என ஐயமுற்றான்.

"என் நாட்டிற்குச் செல்லுதலையும் மறந்து அந்நெய்தல் நிலத்தலைவனோடு சேர்ந்து பெரிய கடற்கரையை யடுத்துள்ள உப்பளங்களில் உள்ள உப்பைச் சுமந்து வருந்தியும், கட்டுமரத்தின்மீது ஏறிக் கடலில் சென்று மீன்பிடித்தும், அவன் ஏவிய தொழில்களையெல்லாம் செய்தும் வந்தால், அந்நிலையிலாவது அவன் மனம் இரங்கித் தன் மகளை எனக்குத் தருவான் அன்றோ!" என எண்ணினான்.

"பொன்னடர்ந் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையள்
திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி
அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்
நலஞ்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்
பெறல்அருங் குரையள் ஆயின் அறம்தெரிந்து
நாமுறை தேஎம் மரூஉப்பெயர்ந் தவனொடு
இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழந்தும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம் பணிந்தனம் அடுத்தனம் இருப்பின்
தருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்
கண்திரள் முத்தம் கொண்டு ஞாங்கர்த்

தேன்இமிர் அகன்கரைப் பகுக்கும்
கானலம் பெருந்துறைப் பரதவன் எமக்கே.''

என்னும் இச் செய்யுள் உணர்த்துகின்றது.

அரும்பதம் : இணர் - பூங்கொத்து ; கோதை - கூந்தல் ; அலவன் - நண்டு ; தொடி - வளையல் ; மருஉப் பெயர்தல் - தங்கு தலை நீக்குதல் ; சேர்ப்பு - கரை ; உழந்து - வருந்தி ; புணை - தெப்பம் ; ஞாங்கர் - பக்கம் ; கானல் - சோலை ; பரதவன் - மீன் பிடித்து வாழ்பவன்.]

## மருதம்

### 1. பண்டைத் தமிழர் மணமுறை :

இந்நூலில் மருதத் திணையில் அமைந்துள்ள ஒரு செய்யுள், பண்டைக்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த மக்களது மணமுறையை நன்கு விளக்குகின்றது. ஓர் ஆண்மகன் தான் கண்டு விரும்பிய பெண்ணைப் பற்றித் தன்னுடைய பெற்றோரிடம் அறிவிப்பான். அவன் பெற்றோர் தம் மைந்தனின் விருப்பத்திற் கிணங்க, அம்மங்கையின் பெற்றோரை யணுகிப் பெண் பேசுவர். பெண்ணின் பெற்றோர் தம் மகளின் கருத்தை யுணர்ந்து மணத்திற்கு இசைவர். பின்பு குற்றமற்ற ஒரு நன்னாளை மணஞ் செய்வதற் குரிய நாளாகக் குறிப்பிட்டு, உறவினர்க்கு அறி விப்பர். அந்நன்னாளில், மணவிழாவில் பங்கு கொள்ளப் பலரும் கூடுவர். தம் இல்லத்தை நாடிவரும் அவர்களுக்கெல்லாம் மணமக்களின் பெற்றோர், சிறந்த உணவு அளித்து உபசரிப்பர். அந்நன்னாளில் சிறந்த உணவாகக் கொள்ளப்படுவன, உழுத்தம் பருப்பைக் கலந்து செம்மையாகச் செய்த பொங் கலும், வெள்ளிய அரிசியாலாக்கிய சோறும், மற்றும் பல கறிவகைகளும் ஆகும். இல்லமெங்கும் விளக்கு

கள் ஏற்றி ஒளிசெய்வித்து, மலர் மாலைகளைத் தொங்கவிட்டு, முற்றத்தில் புது மணல் பரப்பிப் புதுமை செய்வர். அந்நன்னாளில் விடியற்காலையில் வயதால் முதிர்ந்த வாழ்வரசிகள் மணமக்களை ஆசனத்தில் அமர்த்தி, அவர்களுக்குத் தரவேண்டிய பொருள்களையெல்லாம் முறையாகக் கொடுப்பர். மணவிழாக் காலங்களில், வயதுமுதிர்ந்த வாழ்வரசிகளே முன்னின்று மணத்தினை நடத்தி முடிப்பர். பின்பு மைந்தர்களைப் பெற்ற நால்வர் முன்வந்து மணமகளை நோக்கி, "கற்பினில் வழுவாமல் பல நன்மைகளையும் பெற்று, உன்னை யேற்றுக்கொள்ளும் கணவனது மனம் கோணாதவாறு ஒழுக்க நெறியோடு வாழ்க!" என்று வாழ்த்தி, நெற்களும் பூக்களும் கலந்த மங்கலக் கலவையை அவள்மீது தூவுவர். இம்முறைதான் பண்டைநாளில் நமது முன்னோர்கள் மேற்கொண்ட திருமண முறையாகும். இதனை 'நல்லாவூர்கிழார்' என்ற புலவர் பாடிய,

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினில் வழாஅ நற்பல உதவிப்

17345
600 008.

பெற்றோற் பெட்கும் பிணையை யாகுஎன
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை''

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

[அரும்பதம்: மிதவை - பொங்கல்; அமலை - சோறுண்ப தால் தோன்றும் ஆரவாரம்; தொடரி - தொங்கவிட்டு; உச்சிக் குடத்தர் - உச்சியில் சுமந்த குடத்தினையுடையவர்; புத்தகல் மண்டையர் - புது + அகல் மண்டையர் - கையில் ஏந்திய அகன்ற மண்டையென்னும் பாத்திரத்தை யுடையவர்; கொடுவெண் திங்கள் - வளைந்த வெண்ணிறம் பொருந்திய சந்திரன். கம்பலை - ஆரவாரம்; திதலை - தேமல்; வால் இழை - சிறந்த ஆபரணங் கள். பெற்றோன் - தன்னைக் கொண்ட கணவன்; பெட்கும் - விரும்புகின்ற; கதுப்பு - கூந்தல்.]

## 2. பெரியோர் ஒழுக்கம்:

நிலவளத்தால் நிகரற்றுப் பலவளங்களும் பாங்குற அமைந்து விளங்கியது ஒரு சிற்றூர். அச்சிற்றூரில் உள்ள இளைய பெண்கள் வெள்ளியினால் ஆகிய பூணைப் பெற்றுள்ள மெல்லிய கரும்பாகிய உலக்கை யால் மீனின் முட்டைபோல விளங்குகின்ற வெண்மை யான மணலைக் குவித்து, காஞ்சிமரத்தின் நிழலில் இருந்து, தமது குடியைப் பற்றிப் புகழ்ந்து பாடிக் குற்றி விளையாடுகின்றனர். இவ்வாறு பெண்கள் தமது குடிப்பெருமையைப்பற்றி ஆரவாரித்துப் பாடு வது 'வள்ளைப் பாட்டு' எனப்படும். அப்பெண்கள் அவ்வாறு பாடி இன்புறும்போது அருகில் உள்ள பொய்கையில் முழுகி, இருல் மீனைத்தின்ற மீன்கொத் திப் பறவை மருதமரத்தின் கிளையின்மீது அமர்ந்து, அவர்களது பாடலைக் கேட்டு மயங்கி உறக்கத்தை

அடையும். அத்தகைய நீர்த் துறையை யுடையது அச் சிற்றூர்.

அவ்வூருக்குத் தலைவனாக விளங்கும் வனப்பு மிக்க காளை யொருவன், ஒருநாள் தன் சிற்றூரை நீங்கி, அண்மையில் இருந்த மற்றோர் ஊரையடைந் தான். அங்குக் குளிர்ந்த நிழலையுடைய ஒரு சோலையி னுள் புகுந்தான். அச்சோலையில் ஒரு பெண்ணைக் கண்டான். அவள் அச்சிற்றூரின் தலைவனுடைய மகள். அவளைக் கண்ட அவ்வண்ணல் அவளை மணக்க எண்ணினான். அவ்வாறே அவளிடம் கூறினான்; பின் னர் மறைந்தான். ஒருமுறை அவள் தோழி மறைந்து சென்ற அவனை நோக்கி, "குளிர்ந்த நீர்த்துறைக்குத் தலைவனே! மனமானது அறத்தோடு பொருந்தாத தீய வழியை எப்போதேனும் நாடுமானால் நன்னெறி பிறழ்ந்து, தீய நெறியில் செல்ல முற்படும். அந்த மனம் என்னும் மதங்கொண்ட யானையை அறிஞரிடம் கேட்டு உணர்ந்த கேள்வி என்னும் அங்குசத்தின் உதவியால் மீட்டு, அறநெறி வழுவாத முறையில் ஆராய்ந்து, தனது தகுதிக்கேற்பக் கருதிய செயலை முடிப்பதுதான் பெரியோரது ஒழுக்கமாகும்.

"அதனால், மிகவும் அருமையான காரியங்களைச் செய்து முடிக்கின்ற பெரியோர்களின் செயல்களை ஆராயும்போது, உம்மைப்போன்ற பெரியோரிடத்தில் இத்தகைய பொய்யோடு கலந்த புன்மொழிகள் காணப் பெற்றால், இவ்வுலகில் மெய் என்பது எவ்வாறு நிலை பெற்றிருக்க முடியும்?" என்று மிகவும் நயமாக உரைத்து அவனது குற்றத்தை யெடுத்துக்காட்டினாள். தனது தவற்றினை யுணர்ந்த அவன் விரைவில் மணத் துக்குரிய ஏற்பாடுகளைச்செய்து, அம்மங்கையை மணந்தான்.

இச்செய்தியை ஓரம் போகியார் என்னும் புலவர் பாடிய,

“ வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயி நுடங்க
மீன்சினை யன்ன வெண்மணல் குவைஇக்
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி
ஊர்க்குறு மகளிர் குறுவழி விறந்த
இருஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை யுறங்கும் தண்டுறை ஊர !
விழையா வுள்ளம் விழையும் ஆயினும்
என்றும், கேட்டவை தோட்டி யாக மீட்டாங்கு
அறனும் பொருளும் வழாமை நாடித்
தன்தக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னு கும்மே முன்னியது முடித்தல்
அனைய பெரியோர் ஒழுக்கம் ; அதனால்
அரிய பெரியோர்த் தெரியுங் காலை
நும்மோ ரன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோஇவ் வுலகத் தானே.”

என்னும் இச்செய்யுள் உணர்த்துகிறது.

[அரும்பதம் : விழுத்தொடி - சிறந்த பூண் ; நுடங்க - அசைய ; மீன்சினை - மீனின் முட்டை ; குறுவழி - குற்றும்போது; சிரல் - மீன்கொத்திப் பறவை ; தோட்டி - அங்குசம் ; வழாமை - தவறாத தன்மை ; குவைஇ - குவித்து ; முன்னியது முடித்தல் - கருதிய செயலை முடித்தல் ; நும் ஓரன்னர் - உம்மைப்போன்றவர்; பொய்யொடு மிடைந்தவை - பொய்யோடு கலந்த சொற்கள்]

இவ்வாறு குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐவகை நிலங்களின் இயல்பையும் ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு அவ்வந் நிலத்துப் பொருள்களின் இயல்பை அழகுபட விளக்கி, பண்டைத் தமிழரது இன்பம் ததும்பும் இல்வாழ்வின்

இனிய பண்பை யுணர்த்தும் செய்யுட்கள் பல அக நானூற்றில் காணப்படுகின்றன.

இதுவரை நாம் கண்டவற்ருல், பண்டைக்காலத்தில் நம் தண்டமிழ் நாட்டவர் நடாத்திய இல்லற ஒழுக்கம் இனிது புலப்படுகின்றதன்ரே! எட்டுத் தொகையைச் சேர்ந்த நூல்களுள் இதுபோன்ற வேறு நூல்களும் உள. அவற்றைப் படிக்க இது வழிகாட்டி யாக இருக்குமாக!

## (2) புறநானூறு

புறநானூற்றில் புலவர்களால் புகழப்பட்ட புரவலர் பலர் இடம்பெற்றுள்ளனர். அவருள் சிலர்மட்டும் புலவர் பலரால் போற்றப்படுகின்றனர். அப்புரவலர் சிலருள் ஒருவன் **இலவந்திகைத் துஞ்சிய நன் மாறன்** என்பவன். மாறன் என்னும் சொல் அவன் பாண்டியன் என்பதை அறிவிக்கின்றது.

நன்மாறன் புகழ்மிக்கவன்; பேராற்றல் மிக்க வன்; வெற்றிகள் பல பெற்றவன்; செங்கோல் ஓச்சிய செம்மல்; இரவலர்க்கு வரையாது வழங்கிய வள்ளல்; புலவரைப் போற்றும் புனிதன்; கூடலம் பதியோன்பால் கரையற்ற காதல்கொண்டவன்; அவன் காலத்தில் தமிழ்ச் சங்கம் சிறந்த நிலையில் இருந்தது. அவன் இலவந்திகை என்னும் ஊரில் இறந்தமையால் அப்பெயர் பெற்றனன்போலும்!

**இடைக்காடனர்** என்ற பெரும்புலவர் நன் மாறன் காலத்தவர். அவர் கல்வி கேள்விகளில் வல்ல வர். அவருடைய பாடல்கள் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்னும் அழகும், சிறந்த உவமை

களின் பொலிவும் பெற்று விளங்கும் பெருமை உடையவை.

இடைக்காடனுர் கபிலரென்னும் பெரும்புலவரின் தோழர் ; பல கவிகளையும் இயற்றியவர் ; கடைச்சங்க காலத்தே வாழ்ந்தவர். இவர் ஏன் அப்பெயர் பெற்ற னர் என்று விளங்கவில்லை. ஒருவேளை இடைக்காடு என்னும் ஊரில் பிறந்தவராக இருக்கலாம். அன்றி இவரது இயற்பெயராக அது இருப்பினும் இருக்க லாம்.

அத்தகைய புலவர் பாண்டிநாடு நோக்கி வரு கின்றுர். எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலென்ற வயல்கள் இருக்கின்றன. கடலோரங்களில் மீன்பிடிப் போரும் முத்துக்குளிப்போரும் கூட்டம் கூட்ட மாகத் திகழ்கின்றனர். அகம்மிக மகிழ்ந்து வரு விருந்தோம்பும் மக்கட் தொகுதிகளே எங்கும் காணப் படுகின்றன. அவர் பல நாடுகளையும் கடந்து சென்று இயற்கை வளங்களைப் பற்றிய அறிவு நிரம்பியவர். வையை, தாமிரபரணி முதலிய ஆறுகள் அம்மன்ன வன் நிலத்தூடே பாய்வதைக் கண்டார். பரந்த வயல்களும், விரிந்த ஆறுகளும், கடலும் எல்லாம் சேர்ந்து இன்பத்தைப் பயக்கின்றன. "அடடா! எங்கு நோக்கினும் ஒரு பெருமலையைக் காணுமே! காடு என்று அழைத்தற்குத் தகுதிவாய்ந்த ஒரு பெருங்காடு இல்லையே! இப்பாண்டியன் நாட்டில் குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும் இரா போலும். மருதமும் நெய்தலுமே இவனது நாட்டின் கண் உள்ளனவோ?" என்று வியக்கின்றுர். புலவர்க்கு யாது தோன்றியதோ! இவ்வாறு இல்லா தது ஒரு சிறப்பே எனக் கருதுகின்றுர். அம்மாத்திரத் தில் பாண்டி நாட்டு மக்களது மாண்புமிக்க பண்பு

அவர் மனத்தில் தலைதூக்கி நிற்கின்றது. உடனே மலைநாட்டிலிருந்தும் காடுகளிலிருந்தும் வருவோரெல்லாம் அங்கு விருந்துண்டு செல்கின்றனர் என்று பாடுகிறார். அவர்களுக்கெல்லாம் விருந்து வைக்கின்றானும் பாண்டியன்! என்னே அப்புலவரின் திறமை! இதனை,

"வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந!"

(புறம் 42)

என்று அழகாகக் கூறுகின்றார்.

பிறகு அவர் பாண்டியனை நோக்கிச் செல்கின்றார்; அவனது அரண்மனையை யடைகின்றார். மார்பகத்தே விழுப்புண் பெற்று வீரனாகத் திகழும் அவனது தோற்றம் அவரது உள்ளத்தில் நிலைபெற்று அழகியதோர் ஓவியத்தை உருவாக்கிற்று. வீரனான நன்மாறன் ஒரு மலைமீது நிற்கின்றான். அம்மலையைச் சூழ ஒரு பெருங்கடல். அக்கடலின் பேரொலி செவிகளைச் செவிடாக்கின. மலையைச் சூழ்ந்துள்ள கடலினை நோக்கி இடிகளும், மின்னல்களும் தோன்றுகின்றன. இதனைக் கேட்டவுடனே அச்சம் தோன்றுகிறது. அச்சம் நமக்கு மட்டுமன்று, அப்பாண்டியனை எதிர்க்கும் மன்னர்களுக்குங் கூடத் தோன்றுகிறது. மலைபோல் தோன்றுவன கூற்றுவனையும் மிஞ்சும் வன்மைமிக்க அவனுடைய களிறுகளே ஆகும். கடல்போல் ஒலிப்பது அவனது தானை. இடிபோல் முழங்குவது அவனது முரசு. மின்னுவதெல்லாம் அவனது போர்வீரர் ஏந்தியுள்ள வீரவாட்கள். இவையெல்லாம் சேர்ந்து பகைவர்க்கு அச்சத்தை விளைத்தல் வியப்பன்றே. எண்ணியதை எண்ணி

யாங்கு விருப்போ வெறுப்போ அற்ற ஓர் நிலையில் கூறுவது புலவர் இயல்பல்லவா! உடனே அவர் அவனை நோக்கி,

“ ஆறு வீகை யடுபோ ரண்ணில்நின்
யானையும் மலையிற் றோன்றும் பெருமநின்
தானையும் கடலென முழங்கும் கூர்நுனை
வேலு மின்னின் விளங்கு முலகத்
தரைசுதலை பனிக்கு மாற்றலை.” (புறம் 42)

என்று கூறுகின்றார். என்னே உவமையழகு!

அவர் வாயார மன்னனது போர்த்திறனைப் புகழ்ந்தார். அவனது போரைப் போற்றியதனால் மட்டும் அவருக்கு நிறைவு தோன்றவில்லை; மேலும் புகழ வேண்டுமென்று நினைக்கின்றார். அவன் வெற்றி பெறுவது புதியதோ அல்லது வியப்பிற்குரியதோ அன்று என்று கூறிய புலவர், அவனுடைய வீரருக்கு அடுத்தபடி மக்களைப்பற்றிச் சிறிது கூறலாம் என நினைக்கிறார்; முதலில் பயமின்றி வாழ்கின்றனர் மக்கள் என்கிறார். வேற்று நாட்டுப் படையெடுப்புப் பற்றிக் கவலையின்றித் தன் குருளைகளை மிகுந்த ஊக்கத்துடன் பிறரிடமிருந்து காப்பாற்றும் புலியைப் போல் வீரம்மிக்கு, மக்களைக் காத்தலைத் தன் கடனாகக் கொண்டவன் அந் நன்மாறன். மன்னவன் மக்களை அச்சமில்லாமல் வாழச் செய்தான். அவர்கள் அச்சமே அறியாததனால் இன்ப வாழ்க்கை வாழ்கின்றனர். விருந்தோம்பல் தமிழரின் சீரிய பண்பு. அதற்குப் பாண்டிநாட்டு மக்கள் விலக்கல்லரே! ஆகையால் அம்மக்கள் விருந்தினரை எதிர்நோக்கிக் காத்திருந்து சிறந்த முறையில் அவர்களுக்குப் பணியாற்றுகின்றனர். பாண்டி நாட்டு மக்கள்

இல்லங்களில் உண்ட இனிய உணவின் சுவையால் தூண்டப்பட்டு, மலைநாடுகளிலும் காடுகளிலும் வசிக்கும் மக்கள் அடிக்கடி அன்னவர் இல்லங்கள் நோக்கிப் பன்முறை வருகின்றனர்.

அவர்களை இன்முகம் கொண்டு அழைத்துச் செந்தமிழ்ப் பாண்டி நாட்டினர் அறுசுவை யுணவை ஊட்டி யகமகிழ்கின்றனர். அவ்விருந்தின் வகைதான் என்னே! மலைமக்களுக்கும், காட்டில் வாழ்வோருக்கும் அளித்த அவ்விருந்தில் அருமையான பல பொருள்கள் இடம்பெறுகின்றன. நீர்வளம் குன்றாத சீர்மிகு வயல்களில் ஓங்கிச் செழித்துவளர்ந்த செந்நெற் பயிர், கதிர்களின் நிறையைத் தாங்காமல் தலைசாய்ந்து தலையாயார்போல் வளைந்து நிற்கின்றது. அவற்றை அம்மக்கள் அறுத்துத் தங்கள் இல்லங்களில் உள்ள களஞ்சியங்களை நிரப்புகின்றனர். உழவர் அப்பொழுது அங்கே கடைமடைக்கண் காண்கின்ற வாளைமீனைப் பிடித்துக்கொண்டு இல்லம்நோக்கிச் செல்கின்றனர். வேறு சிலர், தாம் நிலத்தை யுழும்போது தமது உழுபடைகளைத் தடுக்கின்ற ஆமைக் கூட்டங்களை யுடன்கொண்டு செல்கின்றனர். மற்றும் சிலர் கரும்புத் தோட்டங்களில் கரும்புகளை வெட்டும்போது அவற்றிலிருந்து வழிந்த தேனைச் சேகரித்து, அதனைத் தம்முடன்கொண்டு செல்கின்றனர். நீர்த்துறைகளிலே நீரைக்கொள்ள வருகின்றனர் பெண்டிர்; அத்துறைகளில் காணப்படுகின்ற செங்கழுநீர் மலர்கள் அவர்களது மனத்தைக் கவருகின்றன. அம்மலர்களைக் கொய்து இல்லம்கொண்டு செல்கின்றனர். இவ்வாறு அவர்கள் பெற்ற வாளையும், ஆமையும், தேறலும், கழுநீரும், விருந்திற்கு உரியனவாக அமைகின்றன. அவர்கள்

தமது இல்லம் நாடிவந்த விருந்தினருக்கு அகமகிழ் வுடன் விருந்தளிக்கின்றனர். இத்தகைய வருவிருந் தோம்பும் பெருமை மிக்க மக்களின் மன்னனும் அந் நன்மாறன்! என்னே புலவரது நன்றி! எல்லா வற்றிற்கும் தலையாய விருந்தோம்பும் பண்பை எவ்வளவு அழகாக எடுத்துக் கூறுகின்றார்!

இத்துணை கூறியும் அவருக்கு மனநிறைவு ஏற் படவில்லை. இன்னும் புகழ நினைக்கிறார். "நினது தானையோ புகழ் மிக்கது! நின் மக்களோ விருந் தோம்பும் பெரும் பண்பினர். இனி நினது பெருமை கூறுவேன்," என்பது போலக் கூறுகின்றார்.

"மலைக்கண்ணே பல ஆறுகள் தோன்று கின்றன. அவை முடிவில் ஒரு பெருங் கடலைநோக்கிச் செல்கின்றன. அதே போலப் பல நாடுகளில் தோன் றிய புலவர்கள் கூட்டம் கடலைநோக்கிச் செல்லும் ஆற்றைப் போல நின்னைநோக்கி வருகின்றது. நீயோ அவர்களுக்குப் பல்வேறு பொருள்களை வழங்கு கின்றாய். வாழ்க நீ! வளர்க உனது வள்ளன்மை!" என்று வாயார வாழ்த்துகின்றார். இதனை,

> "நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
> புலவர் எல்லாம் நின்னோக் கினரே." (புறம் 42)

என்னும் புறநானூற்று அடிகள் உணர்த்துகின்றன.

மன்னனது வள்ளன்மையைப் புகழ்ந்த புல வருக்கு அவனது வீரத்தைப் புகழ விருப்பம் தோன்றுகிறது. புகழ்கின்றார். போருக்கு எழுந்தனர் பகைவர் என்று கேட்டவுடன் படைக்கலங்களை எடுக் கின்றான் மன்னவன். அவற்றுள் கணிச்சி என்பது ஒருவகைப் படைக்கலம். அதனைச் சுழற்றி எறிந்தால் அது பகைவரைப் பெரிதும் துன்பத்துள் ஆழ்த்தும்.

அதனை அப்பாண்டியன் எறிகின்றான். எறியும் பொழுது அவன் முகத்தில் பெருஞ் சீற்றக்குறி காண் கின்றது. அந்நிலையில் அவன் சீற்றங்கொண்ட கூற்று வன் போலக் காட்சியளிக்கின்றான். பகைவரோ அவ னது படைக்கலத்திற்குத் தப்பார். அத்தகைய வலிமை மிக்கவன் அம்மன்னன். ஆயின், புலவர் பொருளுக் காக அவனை நோக்கின் அவன் சீற்றம் மாற்றமுறு கிறது. புலவருக்குப் பொருளை வழங்குவதற்காகச் சேர சோழ மன்னரின் நிலத்தைக் கொள்ள எண்ணி னன் வழுதியென உரைக்கின்றார் புலவர். என்னே புலவரது புகழ்ச்சி!

மதுரை **மருதன் இளநாகனார்** மற்றொரு பெரும் புலவர்; கவி பாடுவதில் பேராற்றல் மிக்கவர்; கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர் **இறையனார் அகப்பொருள்** என்னும் நூலுக்கு ஓர் உரையியற்றி னார். அது நக்கீரனார் இயற்றிய உரையை அடுத்துச் சிறப்புமிக்கதாகக் கருதப்பட்டது. இடைக் காடரைப் போல் இவரும் பாண்டியனது போர்த் திறமையைப் பெரிதும் பாராட்டியுள்ளார் :

அரசனைச் சென்று காண்கிறார் புலவர். கண்ட வுடன் சிவபெருமானின் திருவுருவம் அவரது நினை விற்கு வருகிறது. ஓங்கி உயர்ந்த மேருவைச் சிவன் தனது பெருவில்லாக ஆக்கிக்கொள்கின்றான்; அதில் ஓர் அம்பை விடுத்துத் திரிபுரத்தையும் எரிக்கின்றான். அத்திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளின் எண்ணம் தோன்றுகிறது புலவர்க்கு. சிவபெருமான் தேவர்க்கு வென்றியைத் தேடித் தருகிறான்; அத்தேவர்க்காக ஆலகால நஞ்சை உட்கொண்டு கறை மிடற்றன் ஆகின்றான். அவன் தலையில் பிறைச்சந்திரன் விளங்குகிறது. அவ்விறைவனுக்குரிய மூன்றுவது

கண் மற்ற இரண்டிற்கும் மேம்பட்ட நிலையில் உயர்ந்த இடத்தில் உயர் நிலையில் நெற்றியின் நடுவில் இருக்கிறது. மற்ற இரு அரசராகிய சேர சோழரினும் உயரிய நிலையில் வெற்றி வேந்தனாய் மாலையினை உடைய மாறன் இருப்பது அப்புலவருக்கு இறைவனது திருநுதலின் அழகிய கண்ணை நினைவுறுத்துகின்றதாம். என்னே உவமை நயம்! இதனைப் புலவர்,

> " கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
> பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல." (புறம் 55)

என்று கூறுகின்றார்.

அவனை இத்தகையவன் என்று கூறிய புலவர் அவனது படையின் வீரத்தைப் புகழ எண்ணுகிறார். உடனே அவனது நால்வகைப் படைகளைப்பற்றிய எண்ணம் அவர் மனக்கண்முன் தோன்றுகிறது. யானை, குதிரை, தேர், காலாள் ஆகிய நால்வகைப் படைகளும் அவன் தானையில் சிறப்புற அமையப் பெற்றிருந்தன. அவனது படையில் உள்ள யானைகளோ மிகவும் வீரத்தை உடையன. பகைவரைக் கொல்லுதலே அவற்றின் தொழில். மேலும் அவை சினம் மிக்கவை. பிறர் தூண்டவேண்டிய அவசியம் இல்லாதவை. அத்தகைய 'கடுஞ்சினத்த கொல் களிறுகள்' அவை. அவனுடைய பரிகளோ மிக்க விரைவு கொண்டவை. விரைந்து செல்லுவதில் காற்றினையும் விஞ்சியவை. மிக்க மனச் செருக்குக் கொண்டவை. அத்தகைய 'கதழ்பரிய கலிமாக்கள்' அவை. அவனது தேரின்மீது எப்பொழுதும் மீனக் கொடி பறந்துகொண்டிருக்கும். எவராலும் கைப்பற்ற முடியாத தன்மையை உடைய அது கம்பீரமாக அத்

தேரின் உச்சியில் அசைந்தாடுகிறது. அத்தகைய மீனக் கொடியைப் பெற்ற 'நிமிர் தேர்கள்' அங்கு இருந்தன. அவன் வீரர்கள் அஞ்சாநெஞ்சம் படைத்தவர்கள். போரின்றேல் அவர்கள் தோள்கள் தினவெடுக்கும். எப்போதும் பெரும்போரை விரும்புகின்ற பெருவலி படைத்தவர்கள் அவர்கள்.

இத்தகைய நால்வகைத் தானைகளையும் பெற்று மாட்சிமை மிக்குள்ளது பாண்டியன் ஆட்சி எனப் புகழ்கின்றார் புலவர். அதனை,

"கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடை புகன்மறவரும்"
(புறம் 55)

எனப் பாடுகின்றார்.

பிறகு மன்னனை வாழ்த்த முற்படுகின்றார் புலவர். வள்ளல்களை வாழ்த்திப் புகழ்தல் புலவர்களது கடமை அன்றோ! அவனை "நீ வாழ்வாயாக!" என்று கூறிப் போக அவர் விரும்பவில்லை. அவன் ஆண்மையும், வண்மையும், மென்மையும் மிக்குத்திகழ வேண்டுமென நினைக்கின்றார். அரசனது ஆண்மைக்குக் கதிரவனை உவமிக்கின்றார். கதிரவனைப் போல் ஆண்மை உடையவனாக அரசன் இருக்கவேண்டுமென நினைக்கின்றார். பிறகு அவனது மென்மைத் தன்மையை நினைக்கின்றார். நிலா, தண்மை பொருந்தியது; மென்மை உடையது. அது போன்று மன்னவனும் மென்மை உள்ளவனாக வாழட்டும் என நினைக்கின்றார். பிறகு அவரது வள்ளன்மையை நினைக்கின்றார். உடனே அவர் மனக்கண் முன் மாரிபொழியும் மழை முகில் வருகின்றது. பயன் கருதாது பணியாற்றும் அம்முகிலைப் போன்ற

சிறப்பு வாய்ந்தவன் மன்னன் எனக் கருதுகின்ருர். அதனே,

"ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும்." (புறம் 55)

என்று கூறுகின்ருர்.

பிறகு "நீ வாழ்வாயாக!" என வாழ்த்துகின்ருர். "பன்னெடுங் காலம் நீ வாழவேண்டும்" என்கிருர். தனது வாழ்வை வளப்படுத்திய வழுதி இவ்வையகத்தில் பன்னெடுநாள் வாழவேண்டும் என நினேக்கின்ருர். உடனே அவர் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றுகிறது. புலவர் பல இடங்களேயும் நேரில் கண்டு மகிழ்ந்தவர். அவர் மனத்தில் திருச்செந்தூரும் அங்கு உறையும் முருகக் கடவுளும் அங்குக் கரைஓரம் உள்ள மணற் குவியல்களும் தோன்றுகின்றன. ஆற்று மணலிலும் பலகாலம் வாழ்வாயாக என்று வாழ்த்துவது புலவர்களது மரபு. ஆனல், நாகனரோ எல்லோரையும் ஒருபிடி மிஞ்சிவிடுகிருர். இவருக்கு மணலிலும் பலகாலம் வாழ்வாயாக என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லே. மன்னன் இன்னும் அதிக காலம் வாழ்தல்வேண்டும் என்று எண்ணுகிருர். அதற்காகச் செந்தூரின் அழகிய கடற்கரையில் காற்றின் வேகத்தால் திரட்டப்பெற்று நிலேபெற்று நிற்கும் மணற் குன்றுகளினும் பலகாலம் வாழ்வாயாக என்று வாழ்த்துகின்ருர். என்னே புலவரது பெரு மனம்!

"நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே." (புறம் 55)

என்று அழகுபட அதைப் பாடியிருக்கின்றார்.

வாழவேண்டும் நெடுங்காலம் என்று மன்னனை வாழ்த்தினார். அதனுடன் அவர் நிற்கவில்லை. அவனுக்கு அறவுரையும் கூற நினைக்கிறார். ஒறுக்குங்கால் அஞ்சாது ஒறுத்தலும், புகழுங்கால் வாயார மனமார வானுயரப் புகழ்தலும் புலவர் இயல்பன்றோ! அந் நெறிக்கண்ணே நின்று, ஈண்டு அரசனுக்கு அறவுரை கூறுகின்றார்: "மன்னனே, நீ பெருந்தானைகளை உடையை. ஆயினும் நீவெற்றிபெற்று வாழ்வதெல்லாம் அவற்றால் அன்று. அதற்கு உண்மைக் காரணம் யாதென உனக்குத் தெரியுமா? அதுதான் சிறப்புமிக்க அறநெறியின்கண்ணே நின்று ஒழுகுதலாம். அறநெறி பிறழ்ந்தால் நின் அரச பதவியே நினக்குக் கூற்றமாகி விடும். ஆகையால், நீ வென்றிமிக்கு நன்முறையில் வாழவிரும்பின் அறநெறியின் கண்ணே நின்று ஆட்சி நடத்தவேண்டும்," என்று கூறுகின்றார். மேலும், "இவர் நமக்கு மிகவும் நெருங்கியவர்; நம்முடையவர். அவர் எப்பிழையாற்றினும் அவை பொறுத்துக் கொள்ளத் தக்கவை; மற்றொருவர் நமக்கு வேண்டாதவர்; அவர் சிறு பிழை ஆற்றினும் அது பொறுத்தற்கு உகந்தது அன்று என்ற எண்ணம் நின் மனத்தினின்று அகல வேண்டும்; சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல் போன்று அமையவேண்டும் நின் ஆட்சி முறை," என்று ஒரு சிறந்த உண்மையை எடுத்து விளக்கிக் காட்டுகின்றார். மேலும், "நின் நாட்டில் இல்லை என்பார் இல்லாமல் செய்வாயாக. எல்லோரும்

இன்புற்று வாழ்ந்து இல்லை என்போர்க்கு இல்லை என்னாது வழங்கிப் பெரும்பெயரும் புகழும் பெற்று வாழ்வாயாக! அவ்வாறு சிறந்த ஆட்சியை நீ செலுத்துவாயாக. செலுத்தி ஞாயிறு போன்றும் திங்கள் போன்றும் வானம் போன்றும் வீரமும், மென்மையும், வண்மையும் பெற்று மணற் குன்றினும் பலகாலம் வாழ்வாயாக!'' என்று வாழ்த்திச் செவியறி வுறுத்துகின்றார். என்னே புலவரது பரந்த மனப் பான்மை!

# 3. பதினெண்கீழ்க் கணக்கு

## ஈரடியும் நாலடியும்

தமிழ் மொழியில் உள்ள பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகை நூல்களுள் **திருக்குறளும், நாலடியாரும்** மிகச் சிறந்தனவாகும். அவற்றுள் திருக்குறள் என்னும் நூல் குறுகிய இரண்டடி வெண்பாக்களினுல் அமைந்த செய்யுட்களைக் கொண்டு இலங்குவது என்பதும், அதனை இயற்றியவர் **திருவள்ளுவர்** என்பதும் யாவரும் அறிந்ததேயாகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு. 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் கொண்டதாக இலங்குகின்றது. இது அறநெறியை யறிவுறுத்தும் மறை நூலாகத் திகழ்கின்றது; பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுப் பாரெங்கும் பரவிப் பசுந்தமிழின் சிறப்பைப் பரப்புகின்றது. இந்நூல் எந் நாட்டவர்க்கும், எக்காலத்தவர்க்கும், எம் மதத்தைச் சேர்ந்தவர்க்கும் பொதுவான அற நூலாக இலங்குகின்றது.

**நாலடியார்** என்னும் நூலானது நான்கு அடிகளை யுடைய வெண்பாக்களினுல் அமைக்கப்பட்ட நானூறு செய்யுட்களைக் கொண்டு இலங்குகின்றது. இந்நூலும் திருக்குறளைப் போலவே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது **சமண முனிவர்களால்** இயற்றப்பட்டது என அறிஞர்கள் கூறுகின்றனர். வெவ்வேருன பல முனிவர்களால் இயற்றப்பட்ட செய்யுட்கள் **பதுமஞர்** என்பவரால் தொகுக்கப் பெற்று நாலடி

யென்ற பெயரும் கொண்டது. இந் நூலும் பிற மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.

திருக்குறள், நாலடியார் என்னும் இவ்விரண்டு நூல்களையும் பண்டு தொட்டு, ஒன்ருகச் சேர்த்து எண்ணப்படும் தன்மை இருந்து வந்திருக்கிறது. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' யென்னும் முதுமொழியும், 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்ற ஔவை யார் வாக்கும் இதனை வலியுறுத்துகின்றன. இவ் விரண்டு நூல்களும் பெரும்பாலும் ஒன்று பட்ட கருத்துக்களையே வெவ்வேருன வடிவங்களில் உணர்த்துகின்றன. 'தாளாண்மை' யென்னும் அதி காரத்தை யெடுத்துக் கொண்டு, இந் நூல்களின் இயல்பை நோக்குவோம்:

**தாளாண்மை:**

தாள் என்னும் சொல்லுக்குப் பாதம் என்பது பொருளாகும். தாள்கள் வருந்தும்படி, குன்ருத ஊக்கத்துடன் ஒரு செயலைச் செய்வது தாளாண்மை யெனப்படும். இது ஆள் வினையுடைமை யெனவும் முயற்சியெனவும் கூறப்படும். ஒருவன் தன் வாழ்வில் எய்துகின்ற முன்னேற்றத்திற்கு அவனது தாளாண் மையே காரணமாக விளங்குகின்றது. அதனையுடைய வர்கள் எத்தகைய செல்வத்தையும் எய்துவர். தாளாண்மையில்லாதவர் வறுமையெனும் கொடு நரகில் வாட்ட முறுவர். இதனை,

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

என்ற குறட்பா விளக்குகின்றது.

இக் கருத்தைத் தழுவி நாலடி யுணர்த்தும் விதத்தை நோக்குவோம்: தொடக்கத்தில் துவளு கின்ற சிறு கொம்பாகி நின்ற மரமானது பின்னர்ப் பருத்து, முற்றிய நிலையை யடைந்து, களிற்றினைக் கட்டுதற்குப் பயன்படும் கட்டுத் தறியாக மாறு கின்றது. மக்களது வாழ்க்கையும் அம்மரத்தினது இயல்பிற்குச் சமமானதேயாகும். ஆகவே ஒருவன் சோம்பலால் தாழ்தலில்லாமல் தனது உயர்நிலையைக் கருதி முயற்சி செய்வானுயின், அவன் தன் வாழ்க்கையில் வெற்றியையும், உயர்வையும் காண் பான் என்பது உறுதியாகும். இதனை,

" ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉம்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலும் அன்ன தகைத்தே; ஒருவன்றுன்
தாழ்வின்றித் தன்னைச் செயின்."

என்னும் நாலடிச் செய்யுள் உணர்த்துகின்றது.

முயற்சியுடையார், தாம் மேற்கொண்ட செய லில் எத்தகைய இடையூறு நேரினும், அதைப் பொருட் படுத்தாமல், நன்மையுற முடிக்கின்ற ஒன்றையே கருத்தாகக் கொண்டு உழைப்பர். அத் தகைய பெரியோர்கள் செயற்கரிய பல செயல்களையும் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். அவர்கள் தந்நலம் கருதாது, நாட்டின் பொதுநலங் கருதி உழைக்கும் இயல்பினர் என்பதனை,

" இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றுந் தூண்."

என்ற குறட்பா உணர்த்துகின்றது.

இதனை நாலடியார் "இழிந்தோர், பெரு முத் தரையர் என்னும் அரச மரபினர் மிகவும் மகிழ்ந்து

அளிக்கும், பலவகைப் பொரியலோடு கூடிய நல் லுணவை யுண்டு எவ்விதச் செயலும் புரியாது சோம்பி யிருப்பர். ஆனல் முயற்சியை மேற்கொண்ட பெரி யோர், அத்தகைய உணவின் பெயரையும் அறி யாதாராய், நீராயினும் அதனை யமிழ்தமாகக் கருதி யுண்டு, தாம் மேற் கொண்ட செயலிலேயே சிந்தனை யுடையராயிருப்பர்,'' என உணர்த்துகின்றது.

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ ருர்வர் கயவர்—கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்.''

என்னும் நாலடிச் செய்யுள் இதனை விளக்குகின்றது.

ஒருவன் எச்செயலையும் செய்வதற்குச் சித்தமா யிருத்தல் வேண்டும். அவன் செயற்கரிய செயல் என எதனையும் எண்ணுதல் தவருனதாகும். நம்மால் செய்தற்கு இயலாத அரிய காரியமாயினும், முயற்சி யின் வழி அதனை முடிக்கும் ஆற்றலைப் பெற முடியும். இதனை,

'' அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.''

என்ற குறட்பா விளக்குகின்றது. இதனுடைய கருத்து '' எவ்வகைத் தொழிலையும் செய்து முடித்தல் அருமை என நாம் உள்ளத் தளர்ச்சியுறுதல் கூடாது. அதனை முடிப்பதற்குரிய முயற்சியே பெருமையளிக் கும் '' என்பதாகும்.

'' இசையா தெனினும் இயற்றியோ ராற்ருல்
அசையாது நிற்பதாம் ஆண்மை.''

என்னும் நாலடிச் செய்யுளின் அடிகளும் இக் கருத்தையே உணர்த்துகின்றன.

தாளாண்மையுடையான் ஒருவன், பலருக்கு உதவிபுரியும் பண்பினனாக விளங்க முடியுமேயன்றி, அதனைப் பெறாதவன், எதனையும் செய்ய இயலாது. முயற்சியற்ற ஒருவன் பலர்க்கு உதவி செய்யும் இயல்பினனாக இருத்தல் இயலாதது. அவனது இயல்பு அச்சத்தை அணியாகக்கொண்டு, ஆண் மையையறியாத பேடியினது கையில் உள்ள வாட் படைக்கு ஒப்பானது என வள்ளுவர் கூறினர். ஆண்மையற்ற பேடி, வாட் படையைப் பெற்றிருந்தா னாயினும், அவனுக்கு அதனால் யாதொரு பயனும் உண்டாக முடியாது. அதுபோல தாளாண்மை யில்லாதான் மேற் கொள்ளும் வேளாண்மையும் பயனற்றதாகும். இதனை,

> " தாளாண்மையில் லாதான் வேளாண்மை பேடிகை
> வாளாண்மை போலக் கெடும்."

என்ற குறட்பா உணர்த்துகின்றது.

நாலடியாரில் அமைந்துள்ள,

> " தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலரி
> தேங்கமழ் நாற்றம் இழந்தாஅங்கு—ஓங்கும்
> உயர்குடி யுட்பிறப்பின் என்னும் ?பெயர் பொறிக்கும்
> பேராண்மை யில்லாக் கடை."

யென்னும் செய்யுள் இக்கருத்தைத் தழுவியே அமைந் துள்ளது. இனிமை பொருந்திய கரும்பின் மலரானது மணத்தை யிழந்தது போல, உயர்குடியிற் பிறந்த ஒருவன் தன் பெயரை நிலைநிறுத்துதற் கேதுவான முயற்சியைப் பெறாவிடில், தனது சிறப்பையும் செல் வத்தையும் இழக்க நேரிடும் என்பது இதன் கருத் தாகும்.

இதுபோன்று, நாலடியாரும் திருக்குறளும் ஒன்றுபட்ட கருத்துக்களையே உரைப்பதை மற்றைய அதிகாரங்களிலும் காணலாம்

இந்நூல்களைப் போன்ற மற்றைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும் அறிவது மிகுந்த நன்மையைப் பயக்கும்.

# 4. ஐம்பெருங் காப்பியங்கள்

## சீவக சிந்தாமணி—சீவகன் யாழ்வென்றி

**இராசமாபுரத்தின் சிறப்பு:** கலைமகளும் திருமகளும் பொருந்தி விளங்கும் நிலவள, நீர்வளங்களிற் சிறந்த **ஏமாங்கத** நாட்டிற்குத் தலைநகரமாக விளங்கியது **இராசமாபுரம்** என்ற எழில் மிக்க நகரம். அந்நகரம் வான் அளாவிய மாடமாளிகைகளையும், பல்வகைச் செல்வங்களையும் பெற்று, குபேரனது அளகாபுரிபோல அழகுடன் விளங்கியது.

" காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென்(று) இசையால் திசைபோய துண்டே !"

" நற்ற வம்செய் வார்க்கிடம் தவம்செய் வார்க்கும் அஃதிடம்
நற்பொ ருள்செய் வார்க்கிடம் பொருள்செய் வார்க்கும் அஃதிடம்
வெற்ற வின்பம் விழைவிப்பான் விண்ணு வந்து வீழ்ந்தென
மற்ற நாடு வட்டமாக வைகு மற்ற நாடரோ ?"

" தேன்தலைத் துவலை மாலை பைந்துகில் செம்பொன் பூத்து
ஞான்றன வயிர மாலை நகுகதிர் முத்த மாலை
கான்றமிர் தேந்தி நின்ற கற்பகச் சோலை யார்க்கும்
ஈன்றருள் சுரந்த செல்வத்து இராசமா புரம தாமே !"

**சச்சந்தன் விசயையை மணத்தல்:** எழில் நலம் பொருந்திய அந்நகரிலிருந்து, சச்சந்தன் என்ற மன்னன் ஏமாங்கத நாட்டையாண்டு வந்தான். அவன் தன்னை யெதிர்த்த பகைவரை நாகம்போல்

சீறிக்கொல்லும் வலிமைபெற்றவன். தன்னை அண்டிய வர்க்கு அமிர்தம்போல் இன்பம் பயக்கும் இயல்பினன். கருணையால் தருமனையும், வரையாது வழங்கும் வள்ளன்மையால் வருணனையும், மாற்றார் உயிரைப் போக்குவதால் கூற்றுவனையும், அழகால் காமனையும் ஒத்தவன். அம்மன்னன் விதைய நாட்டு மன்னன் மகளான விசயை என்னும் அணங்கை மணந்து கொண்டான். அவளது அழகில் மயங்கிய மன்னன், நாடாளும் பொறுப்பைப் பெரும்பாரமாகக் கருதினான்.

**கட்டியங்காரனின் கபடச்செயல்:** அம் மன்னனின் அமைச்சர்களுள் **கட்டியங்காரன்** என்ற ஒருவன், மிகுந்த மதிநுட்பம் வாய்ந்தவனாக விளங்கினான். அவன் உள்ளத்தில் நஞ்சும், உதட்டில் தேனும் பொருந்திய இயல்பினன். மன்னனுக்கு உயிர்த்துணைவன்போல நடித்து, அவனது நம்பிக் கைக்கு உரியவன் ஆனான்.

மன்னன் சச்சந்தன், அவனது வெளிவேடத்தை மெய்யென்று நம்பித் தனது அரசுரிமையை அவ னிடம் ஒப்படைத்துவிட்டுத் தன் மனைவியோடு இன்பமாகக் காலங்கழித்து வந்தான். கட்டியங் காரன் அரசாளும் பொறுப்பை யேற்று, வெளிப் படையாக மன்னனுக்கு வேண்டியவன்போல நடந் தனனாயினும், மன்னனைக் கொன்று தானே மன்னன் ஆதற்கு உரிய சூழ்ச்சிகளை யெல்லாம் வகுத்துக்கொண்டு, சிறுமீன் எல்லாம்போக, பெரு மீன் வருமளவும் நீர் மடையில் சோர்ந்து இருக்கும் கொக்குப்போலத் தக்க நேரத்தை எதிர் நோக்கி இருந்தான்.

சில நாட்கள் கழிந்தன. மன்னன் மனைவி கரு வுற்றாள். தன் குலத்தை விளக்க ஒரு குழந்தை

தோன்றப் போவதை நினைத்து மன்னன் மட்டற்ற மகிழ்ச்சியுற்றான்; விசயை மகிழ்வோடு விளையாடி இன்புறுதற்காக ஒரு பொறியூர்தி அமைக்க விரும்பினான்; சிறந்த தச்சனையழைத்து மயில் உருவத்தில் அமைந்து, வானத்தில் பறந்து செல்லக்கூடிய எந்திர ஊர்தி யொன்றைச் செய்யுமாறு பணித்தான். மன்னன் கட்டளைப்படி மயிற்பொறி ஏழு நாட்களில் வினை நுட்பத்தால் விரைந்து செய்யப்பட்டது. அதனைக்கண்ட விசயை மிகவும் மகிழ்ந்தாள். சச்சந்தன் அதனைச் செலுத்துவதற்குரிய முறைகளை யெல்லாம் அவளுக்குக் கற்பித்தான்.

இந்நிலையில், கட்டியங்காரன் நால்வகைப் படைகளையும் தன்வசப்படுத்திக் கொண்டு, மன்னனது மாளிகையைச் சூழ்ந்து முற்றுகையிட்டான். நிலைமை மிகவும் நெருக்கடியானதை உணர்ந்த மன்னன், விசயைக்கு ஆறுதல்கூறி, அவளை மயிற்பொறியில் ஏற்றி மாளிகைக்கு வெளியே அனுப்பிவிட்டுக் கட்டியங்காரனை எதிர்த்துப் போர் புரிந்தான். அப்போரில் மன்னன் கொலையுண்டான்.

**சீவகன் பிறப்பு :** மன்னனைக் கொன்ற கட்டியங்காரன் தனது வெற்றிற்கு அறிகுறியாக வெற்றி முரசு ஒலிக்க, அவ்வொலியானது மயிற்பொறியில் அமர்ந்து வானிடை சென்றுகொண்டிருந்த விசயையின் செவிகளிற் பட்டதும், அவள் தன் கணவன் போரில் மடிந்தான் என்று மயங்கிச் சோர்ந்தாள். மங்கை சோர்வுற்றதனால், செலுத்தப்படாத மயிற்பொறி தானாக மெல்லமெல்லக் கீழே இறங்கி, அந்நகர்ப்புறத்தே இருந்த நன்காட்டில் தங்கியது. பிணத்தின் புகையும், முடை நாற்றமும் நிறைந்து பேயும் அஞ்சத்தக்க அச்சுடுகாட்டில் மயங்கிக்கிடந்த

மங்கை, நள்ளிரவில் ஓர் அழகிய ஆண் மகவைப் பெற்றெடுத்தாள்.

**விசயையின் துயரம்:** அம் மகவைக் கண்டதும் அவளது துயர் அதிகமாயிற்று. "கண்ணே, நீ பிறக்கும் நன்னாளைக் குறித்து நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தேன்! வறியோர்க்கும், வந்தோர்க்கும் வாரிவாரி வழங்க, சிறையில் அடைபட்டோர் விடுதலை பெற, கோயில்கள் தோறும் விழாக்கள் நடைபெற, அரண்மனை முழுவதும் இன்பமாய் விளங்க, மன்னன் மகிழப் பிறப்பாய் என்றல்லவோ எண்ணியிருந்தேன். செல்வமே! என் எண்ணத்தையெல்லாம் பாழாக்கி விட்டாயே. உன்னை இந் நிலையில் காண்பது என் ஊழ்வினையின் பலனோ?" என்றும், "பலவகை இசைக்கருவிகளும் முழங்க, இசை வல்லோர் இன்னிசை பாட, ஆடல் அணங்குகள் அணி நடம்புரிய, மாளிகையில் பிறக்கவேண்டிய நீ, நரியின் ஊளைக் குரல் மத்தள ஓசையாகவும், இறந்தவரது உடலில் எரிக்கின்ற நெருப்பே விளக்காகவும் விளங்க, சுடுகாடு என்னும் மன்றத்தில் பேய் மகிழ்ந்து கூத்தாட, கோட்டான்கள் பா இசைக்க, இவ்வாறோ பிறப்பது?" என்றும் விசயை அழுது புலம்பி, இன்னது செய்வது என்று அறியாமல் மயங்கியிருந்தாள்.

"வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்(டு)உயர்அரங்கில் நிழல்போல் நுடங்கிப் பேயாட
வெவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ! இதுவோ மன்னர்க் கியல்வேந்தே?"

**வனதெய்வம் விசயைக்கு ஆறுதல் கூறுதல்:** இவ்வாறு விசயை புலம்பிக்கொண்டிருந்த நேரத்தில் அக் காட்டில் வசித்து வந்த ஒரு தெய்வம், அவளது

தோழியான வசந்தமாலையின் உருவில் அவள் முன் தோன்றி ஆறுதல் கூறிற்று. அத்தெய்வம் விசயையை நோக்கி, "அம்மையே, நீங்கள் இக் குழந்தையைப் பற்றிச் சிறிதும் கவலையுறுதல் வேண்டா. இதை யெடுத்துச் செல்ல ஒருவன் வருகின்றான். நாம் குழந்தையை இவ்விடத்தில் கிடத்தி விட்டு மறைந்து நின்று நிகழ்வதை யறிவோம்," என்று கூற, விசயை அதற்கு இணங்கிக் குழந்தையின் கையில் அரச முத்திரை மோதிரத்தை யிட்டு, அத் தெய்வத்துடன் ஓரிடத்தில் மறைந்து நின்றாள்.

அவ் வேளையில், இறந்துபோன தன் குழந்தை யைப் புதைப்பதற்காக வந்த **கந்துக்கடன்** என்ற வணிகன் இடுகாட்டின் நடுவில் இளங்கதிரை யொத்த அழகுடன் ஓர் இளம் பாலகன் கிடக்கக் கண்டு, வியப்பும் மகிழ்வும் உற்றான். தனது இறந்துபோன குழந்தையை அடக்கம் செய்துவிட்டு, அங்குக் கிடந்த குழந்தையைத் தூக்கினான். அப்போது அக்குழந்தை தும்மிற்று. மறைவில் நின்ற வன தெய்வம் 'சீவ' என்று கூறி வாழ்த்திற்று. அவ்வொலி வணிகனது செவிகளிற் பட்டது. கந்துக்கடன் குழந்தையின் கையிலிருந்த முத்திரை மோதிரத்தைக் கண்டு அது மன்னன் குழந்தையாயிருத்தல் வேண்டும் என்று ஊகித்து அம்மோதிரத்தைத் தன் மடியில் மறைத்து வைத்துக் கொண்டான். பின்பு குழந்தையைத் தன் இல்லத்திற்குக் கொண்டு சென்று, தன் மனைவியான **சுநந்தை**யிடம் "இறந்து போன நம் குழந்தை இறைவன் அருளால் உயிர் பெற்றது," எனக் கூறிக் கொடுத்தான். அவளும் அக் குழந்தையை மகிழ்வுடன் ஏற்று இன்புற்றாள்.

இவ்வாறு தனது குழந்தை தக்க பாதுகாவலான

இடத்தை யடைந்ததும், விசயை அதனைப் பற்றிய கவலையை நீக்கியவளாய்க் காணப்பட்டாள். வசந்த மாலையின் உருவைக்கொண்ட வன தெய்வம், அவளைத் தண்டகாரணியத்தில் உள்ள தவப் பள்ளியில் சேர்த்து விட்டுச் சென்றது.

**சீவகனின் இளமைப் பருவமும், கல்வியும் :** கந்துக்கடன் ஒரு நன்னாளில் தன்னுடைய உறவினர்களையும் பெரியோர்களையும் கூட்டி, அக் குழந்தைக்குச் '**சீவகன்**' என்று பெயரிட்டுச் செல்வமாக வளர்த்து வந்தான் ; அப் பாலகன் வளர்ந்து ஆறாண்டுப் பருவத்தினனாக விளங்கியபோது, **அச்சணந்தி** யென்ற ஆசிரியனிடம் அவனை விடுத்துக் கல்வி கற்கும்படி செய்தான். அவ்வாசிரியன் சீவகனுக்குப் பல கலைகளையும் சிறந்த முறையில் கற்பித்தான் ; மேலும் படைக்கலப் பயிற்சி, யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய அரசர்க்குரிய போர்த் தொழிற் கல்வியையும் கற்பித்தான். சீவகன் ஆசிரியர் தனக்குக் கற்பித்த எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினான் ; சில ஆண்டுகளில் தக்க பருவத்தை யடைந்தான் ; கண்டவர் மயங்கும் கட்டழகனாய் விளங்கினான். இந்நிலையில் அச்சணந்தி அவனிடம், மன்னன் சச்சந்தன் விசயையை மணந்ததையும், கட்டியங்காரனது வஞ்சகச் செயலையும், அவனது பிறப்பையும் உணர்த்தினான். துயரம் செறிந்த தனது வரலாற்றை ஆசிரியன் கூறக் கேட்ட சீவகன், தன் தந்தைக்கும் தாய்க்கும் நேர்ந்த நிலையை நினைத்து வருந்தினான். "வஞ்சகன் கட்டியங்காரனை என் வாளினால் வெட்டி வீழ்த்தி, அவன் உடலைக் காக்கைக்கும் கழுகிற்கும் இரையாக்குவேன்," என்று சினங் கொண்ட சிங்கம்போலச் சீறினான். அப்

பொழுது அச்சணந்தி ஓராண்டு வரை அவனைப் பொறுத்திருக்குமாறு பணித்தார். அதற்கிசைந்து, சீவகனும் தனது சினத்தைத் தணித்துக்கொண்டான். அவன் தனது ஆசிரியர் சொற்படி, கட்டியங்காரனை எதிர்ப்பதற்கு ஏற்ற நேரத்தை எதிர் பார்த்து, கந்துக்கடன் மகனான நந்தட்டன், தேவதத்தன், பதுமுகன், புத்திசேனன், விபுலன் ஆகிய தோழர்களோடு கூடி வாழ்ந்து வந்தான்.

**ஸ்ரீ தத்தன் கடலிற் செல்லுதல் :** இந் நாளில் இராசமாபுரத்தைச் சேர்ந்த ஸ்ரீ தத்தன் என்ற வணிகன் வாணிகத்தின் பொருட்டு மற்றும் பல தோழர்களோடு, அலைகடலில் மரக்கலம் செலுத்திச் சென்று ஒரு தீவை யடைந்தான். அவன் அத் தீவில் இறங்கிச் சில நாட்கள் தங்கியிருந்து, தான் கொண்டுவந்த பொருள்களை யெல்லாம் விற்றுப் பெரும் பொருள் திரட்டினான். பின்னர் அப்பொருளை யெல்லாம் மரக்கலத்தில் ஏற்றித் தன்னோடு வந்த மற்றைய தோழர்களுடன் ஊருக்கு வந்துகொண்டிருந்தான்.

**கலம் புயலால் கவிழ்தல் :** அத் தீவிலிருந்து கிளம்பிய கலம், காற்றைக் காட்டிலும் விரைந்து சென்று, ஐந்நூறு காகத் தொலைவைக் கடந்தது. அந்நேரத்தில், வானவெளியில் கருமேகக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து இடித்து மின்னிப் பெருமழை பெய்வித்தன. மழையோடு கடும் புயலும் கலந்துகொண்டது. கொந்தளிக்கும் கடல் நடுவே சிக்கிய மரக்கலம், கடும் புயலின் கொடுமைக்கு ஆற்றாது தத்தளித்தது. மரக்கலத்தில் இருந்த மக்கள், தங்களுக்கு முடிவு காலம் நெருங்கிவிட்டது என்று நினைத்து அலறினர். ஸ்ரீ தத்தன் அவர்களை யெல்லாம் நோக்கி,

''தோழர்களே, துன்பம் தொடரும்போது அதனை நினைத்து வருந்துவதால் என்ன பயன்? வருவது வந்தே தீரும். நாம் அழுது புலம்புவதால் வரும் துன்பம் நீங்கி விடுமா? வருந்தாதீர்கள். ஒருவனது வாழ்நாளின் எல்லை முடிவு பெறவில்லையானால், கடலினுள் புகுந்து நீரில் அமிழ்ந்தாலும் அவன் பிழைத்துக் கொள்வான். இதற்காகக் கலங்குதல் வேண்டா. அசோக மரத்தினது அடியில் அமர்ந்துள்ள அருகனது திருவடிகளை நினைத்து வணங்குவீராயின் நமது துன்பமெல்லாம் தொலையும்,'' என்று அவர்களுக்கு ஆறுதல் கூறினான். பின்னர்ச் சிறிது நேரத்திற்கெல்லாம் பாய்மரக் கயிறு அறுபட்டு, மரக்கலம் நீரினுள் அமிழத் தொடங்கியது. கலத்தில் இருந்தவர் அனைவரும் கடலில் மூழ்கினர்.அவர்களுள் ஸ்ரீ தத்தன் மட்டும், உடைந்த மரக்கலத்தின் மரத் துண்டு ஒன்றைப் பற்றிக் கொண்டு, அதன் உதவியால் கரையை அடைந்தான். அங்கிருந்த ஒரு மலர்ச் சோலையை யடைந்து, தனது மரக்கலத்தையும் சுற்றத்தாரையும் இழந்தமைக்காக மிகவும் வருந்தி, துயரத்தோடு அமர்ந்திருந்தான். தன்னுடைய நகரத்திற்குச் செல்வதற்கு ஏதாவது மரக்கலம் கடலில் வாராதா, என்ற எண்ணத்துடன் கடலை நோக்கிக் கொண்டு அமர்ந்திருந்தான்.

**ஸ்ரீ தத்தன் விஞ்சையர் நாடு அடைதல்:** அச் சோலையில் ஸ்ரீ தத்தன் ஒருவனைக் கண்டு, அவனிடம் சோகம் ததும்பிய தனது வரலாற்றைக் கூறினான். அவன் தரன் என்னும் பெயரினன்; விஞ்சையர் குலத்தைச் சேர்ந்தவன். அவன் ஸ்ரீ தத்தனை நோக்கி, ''நண்பா, நீ வருந்துதல் வேண்டா; நான் பல வித்தைகளிலும் வல்லவன்;

கடலில் மூழ்கிய உனது தோழர்களையும் மறைந்து போன உன் பொருள்களையும் ஒரு கணப் பொழுதில் மீட்டுத்தரும் ஆற்றலை யுடையேன்,'' என்று கூறி அவனைத் தனது குதிரைமீது ஏற்றிக்கொண்டு வான வெளியில் பறந்து சென்றான். அவன் ஸ்ரீ தத்தனைத் தனது நாடாகிய **காந்தார நாட்டிற்குக்** கொண்டு சென்றான்.

அந் நாட்டின் தலைநகராகிய **இரமணீயபுரம்** என்னும் நகரத்தில் விஞ்சையர்களுக்கெல்லாம் மன்னனான **கலுழவேகன்** என்பவன் இருந்தான். அவன் மனைவி **தாரணி** யென்பவள் ஒரு அழகிய பெண்ணை ஈன்றாள். அப் பெண்ணினது பிறப்பின் பலன்களை ஆராய்ந்த சோதிடன், "இப் பெண்ணுக்கு எல்லா நன்மைகளும் இராசமா புரத்தில்தான் உண்டாகும்,'' என்று கூறினான். அப் பெண்ணும் **காந்தருவதத்தை** யென்ற பெயருடன் வளர்ந்து வந்தாள். அவள் அழகிலும், அறிவிலும் ஒப்பற்றவளாக விளங்கினாள். வீணைப் பயிற்சியில் தன்னை வெல்லக் கூடியவர் எவரும் இல்லையென்னு மாறு சிறந்த வன்மை பெற்றிருந்தாள். தரன் இச் செய்திகளையெல்லாம் தத்தனுக்கு உரைத்து, அவனை மன்னனது அவைக்கு அழைத்துச் சென்றான்.

### கலுழவேகன் தத்தையை ஸ்ரீ தத்தனிடம் ஒப்பு வித்தல் :

ஸ்ரீ தத்தன் அரண்மனையை யடைந்தபோது, மன்னன் கலுழவேகன் அவனை யெதிர்கொண்டு அழைத்து இன்னுரை கூறி இருக்கை தந்து இருக்கச் செய்து அவனோடு அளவளாவினான். ஸ்ரீ தத்தன்

அங்குச் சின்னுட்கள் தங்கியிருந்து, பின்பு தன்ஊருக் குக் கிளம்ப முற்பட்டான். அப்போது கழலுவேகன் தனது மகளான காந்தருவதத்தையை ஸ்ரீ தத்தனிடத் தில் அடைக்கலமாகத் தந்து "வணிகர் தோன்றலே! நீவிர் என் மகளாகிய இவளை நும் நகருக்குக் கொண்டு சென்று, எவன் ஒருவன் இவளோடு போட்டியிட்டு யாழ்ப் பயிற்சியில் வெற்றி பெறுகின்ருனே, அவ னுக்கு மணஞ் செய்விப்பீர்," என்று கூறி, பின்பு அவளுக்கு வேண்டிய ஆடையணிகளையெல் லாம் அளவிறந்தனவாகத் தந்தான். அவளுடன், வீணுபதி யென்பவளையும் அனுப்பி வைத்தான். முன்பு அவன் கடலில் இழந்த தோழர்களையும், பொருள்களையும் தான் மீட்டுக் கொடுத்தான். தத்தன் மிகுந்த மகிழ்ச்சியோடு, தன் தோழர்களுடனும், தத்தையுடனும் தன் இல்லத்தை யடைந்து, தனது மனைவியினிடம் நிகழ்ந்தவற்றைக் கூறினுன். தத்தன் மனைவி, தத்தையைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு, அவளைத் தன் மகளைப் போலப் பாது காத்து வந்தாள்.

**சுயம்வர மண்டபம் அமைத்தல்:**

ஸ்ரீ தத்தன், காந்தருவதத்தைக்கு விரைவில் மண முடிக்கக் கருதிச் சுயம்வர மண்டபம் ஒன்று அமைக்க விரும்பினுன். அதன் பொருட்டு மன்னன் கட்டியங் காரனைக் கண்டு அவனது இசைவையும் பெற்ருன். சிற்பக் கலையில் சிறந்த கலைஞர்களைக் கொண்டு சிறந்த மண்டபம் ஒன்றை அமைத்தான். அம்மண்ட பத்தின் சுவர்களும் தூண்களும் பொன்னுல் அமைக் கப்பட்டன; பவளத்தால் ஆகிய உத்தரங்களும், பளிங்கினுல் ஆகிய தளங்களும் அமைக்கப்பட்டன.

அம்மண்டபம் சிறந்த ஓவியங்கள் பலவற்றைப் பெற்று எழிலுடன் விளங்கியது.

**சுயம்வரத்திற்கு மக்கள் வருகை :**

ஸ்ரீ தத்தன், தத்தையினது சுயம்வரத்திற்காக நாள் குறிப்பிட்டு, அதனை நகரெங்கும் முரசு அறைந்து தெரிவிக்கும்படி ஆணையிட்டான். முரசு எறியும் வள்ளுவர் யானைமீது அமர்ந்து முரசுகொட்டி, "பல கலைகளிலும் வல்ல காந்தருவதத்தை யென்னும், பெண் தன்னை யாழிசையில் வெல்லும் ஆண் மகனுக்கு மாலை சூட்டுவாள்," என்று அறிவித்தார்.

அச்செய்தி பல நாடுகளிலும் பரவியது. தத்தையினது சுயம்வரத்தைக் கேள்வியுற்றுப் பலநாட்டு அரசிளங் குமரரும் இராசமாபுரத்தை நோக்கி விரைந்தனர். மன்னரேயன்றி, மறைக்குலத்தவரும், வணிகரும் தத்தையை யாழ்ப் போரில் வென்று, மாலை சூட்ட வேண்டும் என்ற கருத்தினால், தேனை விரும்பிய வண்டுக் கூட்டங்கள் போல வந்து சேர்ந்தனர். அந்நன்னாளில் காந்தருவதத்தையை அவளது தோழியர் நன்னீராட்டி, வெண்மேகத்தைப் போன்ற வெண்மையான ஆடையை யுடுத்தி, பாதத்தில் சிலம்பும் கிண்கிணியும் சேர்த்து, கயல்மீன் போன்ற கருவிழிகளில் மைபூசி, கருமேகம் போன்ற கரிய கூந்தலில் மணம் மிகுந்த முல்லை மலரைச் சூட்டி அலங்கரித்தனர். பின்பு திருமகளை யொத்த அழகினையுடைய தத்தை, மன்னர்களும் மற்றையவரும் சூழ்ந்திருந்த மணிமண்டபத்தை யடைந்தாள். பட்டினால் இயன்ற திரைகள் சூழ, மலர் மாலைகளால் அலங்கரிக்கப் பட்ட அரங்கில், 'செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைப் போல' அமர்ந்து குற்றமில்லாத நல்ல

யாழைக் கையில் எடுத்து, அதன் நரம்புகளைத் தனது மெல்லிய விரலால் தெறித்தாள்.

**தத்தையின் பாடல் :**

இவள் இளவேனிற் காலத்தின் இயல்பைக் குறிக்கும் இனிய பாடல் ஒன்றைப் பண்ணில் அமைத்து, யாழ் இசையோடு ஒத்து வரும்படி பாடிக் காட்டினாள். தத்தையின் பாடலைக் கேட்டதும் இனிய இசையை விரும்புகின்ற கின்னரம் என்ற பறவை மெய்ம்மறந்து விழுந்து கிடந்தது. விலங்கினங்களும், புள்ளினங்களும் தம் நிலை மயங்கிச் சோர்ந்தன. புருவங்கள் மேலே ஏறாமலும், கண்கள் ஆடாமலும், கழுத்து வீங்காமலும், பற்கள் வெளிப்பட்டுத் தோன்றாமலும் அவள் பாடிய தன்மையைக் கண்டு மண்டபத்துள் கூடியிருந்தவர், ''பவளச் செவ்வாய் திறந்து இப் பாவை தான் பாடினாளோ? அன்றி வீணையின் நரம்பு தான் பாடிற்றோ?'' எனக் கூறி வியப்புற்று உள்ளம் உருகினர்.

**தத்தைக்கு யாவரும் தோற்றல் :**

காந்தருவதத்தை பாடி முடித்ததும், அவளது தோழியான வீணாபதி அங்கிருந்த அரசர்களை யெல்லாம் நோக்கி, ''நாடு காக்கும் தொழில் பூண்ட நற்குடியில் பிறந்தவரே! எம் தத்தையோடு யாழ்ப் போரில் ஈடுபட்டு அவளை வென்று மணப்பதற்குத் திறமை மிக்கவர்கள் முன்வருவீர்,'' என அழைத்தாள். அப்பொழுது பல மன்னர்கள் யாழைக் கையேந்தி ஒவ்வொருவராகப் பாடத் தொடங்கினர். அவர்களது இசையைக் கேட்டதும், முன்பு தத்தையின் இசைக்கு

மயங்கி நிலத்தில் வீழ்ந்து கிடந்த பறவைகள், அவர்களை இகழ்வன போல விண்ணில் பறந்தன. பின்பு தத்தை மீண்டும் பாட, பறவைகள் மீண்டும் நிலத்தையடைந்தன. இவ்வாறு மன்னர்களும் தத்தையும் மாறி மாறிப்பாட மன்னர்களது பாடலைக் கேட்டு வானத்தில் பறப்பதும், தத்தையின் இசையில் மயங்கித் தரையில் வீழ்வதுமாகப் பறவைகள் இருந்தன. முடிவில் மன்னர்கள் மங்கையின் யாழிசைக்கு முன்னிற்க மாட்டாது தோல்வியுற்றனர். அவர்களுக்குப் பின்னர் அந்தணர் குலத்தில் உதித்த மைந்தர்கள் தத்தையோடு போட்டியிட்டுத் தோல்வியுற்றனர். பின்னர் வணிகர் குலத்தினரும் யாழ்ப் போரில் ஈடுபட்டுத் தத்தையின் ஆற்றலுக்கு முன்னிற்க மாட்டாது, புயல்காற்றினால் நிலைகுலைந்த தாமரைப் பொய்கையைப் போலப் பொலிவு இழந்து தோற்றனர். தத்தையை யாழ்ப் போரில் வெல்லுதற்குப் பலர் வருவதும், தோல்வியுறுவதுமாக ஆறு நாட்கள் கழிந்தன. மங்கையை மணம் புரியக் கருதி வந்த மைந்தர் அனைவரும் தோற்றுப் பின்னிட்ட பின்னர், மன்னன் கட்டியங்காரன் 'இவளை வெல்லக் கூடியவன் இவ்வுலகில் எவனும் இல்லை' என்று கூறி, யாழ்ப் போரை நிறுத்துமாறு ஸ்ரீ தத்தனுக்குக் கூறினான்.

**சீவகன் வருகை :**

அச்செய்திகளை யெல்லாம் செவியுற்ற சீவகன் தன்னுடைய தோழர்களோடு ஆராய்ந்து, தானும் அப்போருக்குச் செல்ல எண்ணித் தனது வளர்ப்புத் தந்தையான கந்துக்கடனிடம் அனுமதி கேட்டனன். அப்போது கந்துக்கடன், "சீவக! நீ யாழ்ப் போரில் வெற்றி பெற்றால் சூழ்ச்சியே உருவான கட்டியங்

காரன், எவ்வாருயினும் உனக்குத் தீங்கு செய்ய நினைப்பான்- ஆகையால் தக்க பாதுகாப்புடன் சென்று, வெற்றி வீரனுகத் திரும்பி வருக,'' என்று விடை கொடுத்தான். பின்பு அவன், தன் மார்பில் மின்னலைப் போல் ஒளி வீசும் சிறந்த அணிகலன்களை யணிந்து, செவிகளில் குண்டலம் அணிந்து, சந்தனம் பூசி, எஃகினுல் ஆகிய உடைவாளை இடையிற் செருகி, வெண்மையான ஆடையை யுடுத்துத் தன்னை அழகு பட அலங்கரித்துக் கொண்டு, செம்புள்ளி பொருந்திய நெற்றியை யுடைய யானையின்மீது ஏறியமர்ந்து, போர் செய்யும் புலியை யொத்த தோழர்கள் புடை சூழச் சுயம்வர மண்டபத்தை நோக்கிச் சென்ருன். 'கருநிறக் குன்றின்மீது செங்கதிர் சேர்ந்தாற் போல,' களிற்றின்மீது வரும் காளையைக் கண்ட மக்கள், "இன்றைய யாழ்ப் போரில் தத்தை திண்ணமாகத் தோல்வியுறுவாள்,'' என்று கூறினர். சீவகன் ஏறிச் சென்ற களிறு மண்டபத்தின் வாயிலை அடைந்ததும், அவன் கீழே இறங்கி மண்டபத்தினுட் சென்ருன். அன்றைய யாழ்ப் போரின் முடிவைக் காண, 'பொங்கும் கடலைப் போல'ப் பொது மக்கள் திரண்டார்கள்.

**சீவகன் குற்றமுள்ள யாழ்களை விலக்குதல் :**

சீவகன் மன்றத்தில் அமர்ந்ததும், காந்தருவ தத்தை யாழ் ஒன்றை யெடுத்து வீணுபதியிடம் கொடுத்து, அதனை யவனிடம் கொடுக்குமாறு பணித்தாள். வீணுபதியும் அவ் யாழைக் கொடுக்க, அதனைக் கையில் வாங்கிய சீவகன் அதன் இயல்பினை ஆராய்ந்தான். பின்பு வீணுபதியிடம், "இந்த யாழ் நீரில் நீண்ட நாள் கிடந்து நைந்துபோன மரத்தினுல் செய்யப்பட்டது. இது வேண்டா,'' எனக் கூறி

விலக்கினான். பின்பு அவள் மற்றொரு யாழைக் கொடுக்க அதனையும் நோக்கி, "இது வாளினால் காயப்படுத்தப்பட்ட மரத்தினால் செய்யப்பட்டது. இதுவும் வேண்டா," என விலக்கினான். பின்பு வீணாபதி பல யாழ்களைக்கொடுக்க, "கொல்லைகளில் உழவர்களால் சுடப்பட்டுக் கரிந்துபோன மரத்தின் பாகத்திலிருந்து செய்யப்பட்டது இது," என்றும், "யானையினால் முறிக்கப்பட்ட மரத்தினால் செய்யப் பட்டது இது," என்றும், "இடி விழுந்த மரத்தினால் செய்யப்பட்டது இது," என்றும் கூறி அவற்றை யெல்லாம் விலக்கினான். பின்பு அவள் சிறந்த பட்டுத் துணியினால் ஆகிய உறையினுள் வைக்கப்பட்ட நல்ல யாழ் ஒன்றைக் கொடுக்க, அதனைக் கையில் வாங்கி நோக்கிய சீவகன், "இது மிகவும் சிறந்தது. நிலமகள் என்னும் தாய் பெற்றெடுக்க, விண்மகள் என்னும் செவிலித்தாய் மழையென்னும் பாலூட்டி வளர்க்க, குற்றமற்ற முறையில் வளர்ந்த மரத்தை வாளினால் செம்மையாக அறுத்துச் சிறந்த முறையில் இந்த யாழ் செய்யப்பட்டிருக்கின்றது," என்று கூறி அதனைக் கையில் கொண்டான்.

**சீவகன் யாழ் இசை :**

குற்றமற்ற யாழைக் கையில் கொண்ட சீவகன் அதன் நரம்புகளை மீட்டி, இசையைக் கூட்டி, விரலால் தெறிக்க, அதிலிருந்து எழுந்த ஓசையைக் கேட்டு மக்களும் தேவரும் மயங்கினர். விலங்குகளும், புள்ளினங்களும் சோர்ந்தன. மரமுங் கல்லும் உருகின. அண்ணலான சீவகன், நரம்புகளை ஆராய்ந்து தனது அழகிய விரலால் தடவி இசைத்த தன்மையையும், இனிய பண்ணோடு பாடிய வனப்பையும் நோக்கி

யாவரும் மெய் சோர்ந்தனர். விண்ணவர் வியப்ப, மன்னவர் மகிழ, கந்தருவர் களிக்க, புள்ளினங்கள் மெய்சோர, சீவகன் பாடிய போது அரசரெல்லாம் 'சுவரில் வரைந்த ஓவியங்களைப் போல' அசைவற்று இருந்தனர்.

" வீழ்மணி வண்டு பாய்ந்து மிதித்திடக் கிழிந்த மாலை
சூழ்மணிக் கோட்டு வீணைச் சுகிர்புரி நரம்பு நம்பி
ஊழ்மணி மிடறும் ஒன்றுய்ப் பணிசெய்த வாறு நோக்கித்
தாழ்மணித் தாம மார்பிற் கின்னரர் சாம்பி னுரே."

" விண்ணவர் வியப்ப விஞ்சை வீரர்கள் விரும்பி ஏத்த
மண்ணவர் மகிழ வான்கண் பறவைமெய்ம் மறந்து சோர
அண்ணல்தான் அனங்கன் நாணப் பாடினுன் அரச ரெலாம்
பண்ணமைத் தெழுதப் பட்ட பாவைபோல் ஆயினுரே."

## காந்தருவதத்தை சீவகனுக்குத் தோற்றல் :

இவ்வாறு சீவகன் பாடிய பாடலைக் கேட்ட, தத்தை, " பருந்தும் அதன் நிழலும் போல, பாட்டும் அதன் இசையும் ஒன்றுக இந்நம்பிக்குச் சேர்ந் துள்ளன, நாம் இவனுக்குத் தோற்று விடுவோம்," என எண்ணியிருந்தாள். அவன் பாடி முடிந்ததும், தத்தை யாழைக் கையிலே ஏந்திப் பாடத் தொடங் கினுள். அவள் பாடும்போது, பண்ணும் பாடலும் வெவ்வேருய் இயங்கி, அவளது விரல்கள் நரம்பின் மீது பொருந்தாது நடுங்க, குரலிலும் நடுக்கம் தோன்றி இசையில் தோல்வியுற்ருள். தன்னை வென்ற அந்நம்பிக்குத் தத்தை மாலை சூட்டினுள் ; அவனது பாதங்களை வணங்கி நின்ருள். தத்தை சீவகனுக்குத் தோற்று அவனுக்கு மாலை சூட்டிய நிகழ்ச்சியைக் கண்ட மக்கள் களிப்பு மிக்கவராய்ச் சீவகனைப்

புகழ்ந்து கடலினும் மிகுந்த ஆரவாரம் செய்ய, அங்கிருந்து நிகழ்ந்தவற்றை யெல்லாம் அறிந்த கட்டியங்காரன் உள்ளம் புழுங்கினுன்.

**கட்டியங்காரன் மன்னர்களிடம் கூறுதல் :**

அவன், அங்குக் கூடியிருந்த மன்னர்களை யெல் லாம் நோக்கி, "மன்னர்களே, நீங்கள் உங்கள் செய் கையால் அரசர் குடிக்கே மாசு உண்டாக்கி விட்டீர். நம்மைக் காட்டிலும் தாழ்ந்த வணிகர் குலச் சிறுவன் ஒருவனுக்குத் தோற்று, 'சூரியன் முன்னர் மின் மினிப் பூச்சியைப் போல' ஆகிவிட்டீர்கள். இந் நாளில் அச்சிறுவனேடு போர் செய்து, தத்தையைக் கைப்பற்ற அஞ்சுவீர் ஆயின், முடியைத் துறந்து முனிவராகப் போதலே நல்லது. இன்று நீங்கள் போர் செய்யாது இருந்தால், திருமகளை யொத்த இப் பெண்ணை யடைந்த சீவகன், நாளை உங்கள் நாடு நகரங்களை யெல்லாம் கைப்பற்றி உங்களை யெல்லாம் அடிமையாக்குவான். நீங்கள் இன்று அவனை எதிர்த்து வெற்றி பெற்ருல் உங்கள் பெயரையும் நாட்டையும் பாதுகாத்துக் கொள்ளலாம். நாம் பல ராய் இருக்கின்ருேமே, ஒரு நங்கையை அடைவது எவ்வாறு எனக் கலங்குதல் வேண்டா. உங்களில் எவ ஞெருவன் போர்க்களத்தில் புகுந்து மதங்கொண்ட யானையைப் போல உழக்கி வெல்கின்ருனே, அவன் இப்பெண்ணை யடையலாம்," என்று கூறி அவர் களுக்கு வெறியூட்டினுன்.

## பகைகொண்ட மன்னருக்குப் பதுமுகன் அறிவுரை

கட்டியங்காரன் உரையில் மயங்கிய காவலர் அனைவரும் சீவகனோடு போர் புரிய முன் வந்தனர். அப்போது சீவகன் தோழனான பதுமுகன் அவர்களை நோக்கி, "மன்னர்களே! இசைப்போரில் ஒரு பெண்ணுக்குத் தோற்ற நீங்கள் அப்போரில் வெற்றி பெற்ற ஒருவனை படை வலிமை கொண்டு வெல்ல நினைப்பது, உங்களுக்குப் பொருத்தமான செய்கையன்று. உங்களது இச்செயல் உமது குடிக்குப் பழியை யுண்டாக்கும்; அறிவினைப் பணயம் வைத்த அரசர்களே! யானையின் துதிக்கையில் சிக்கிய கவளத்தை மீட்பது முடியுமோ! சினம் கொண்ட சிங்கம் தன் துணையோடு இருக்கும்போது, அதனை வெல்லுதல் வலிமை மிக்க புலியினாலும் இயலாது, என்பதை நீங்கள் அறியமாட்டீர்களோ? தத்தையை மணக்க விரும்பி நிற்கின்ற சீவகனை வெல்லுதல் உங்களால் இயலாததாகும். அவனிடமிருந்து தத்தையைப் பிரிக்க தேவர்களுக்கு மன்னனான இந்திரனாலும் முடியாது. நீங்கள் இப்போரில் சீவகனை வென்றீராயினும் கட்டியங்காரனின் சூழ்ச்சிக்குத் தப்பி, தத்தையை அடையமுடியாது. பின்பு உங்களை அவன் வென்று, உங்கள் நாட்டை யெல்லாம் கைப்பற்றுவான்; அவனது சூழ்ச்சித் திறத்தில் மயங்கி அவதிப்படாதீர்," என்று அறிவுரை கூறினான். ஆனால் அவனது அறிவுரைகளெல்லாம் 'குருடனுக்குப் பயன்படாத விளக்கின் ஒளி போல'ப் பயனற்ற நிலையை யடைந்தன. அவர்கள் சீவகனை எதிர்க்கத் தமது படைகளோடு முற்பட்டார்கள்.

**சீவகன் போருக்கு எழுதல் :**

மன்னர்கள் சீவகனை யெதிர்த்து வருவதைத் தத்தை யுணர்ந்து, ஆற்றெணுத் துயருற்றாள். அப்போது சீவகன் அவளுக்குப் பல ஆறுதல் மொழிகள் கூறிப் பதுமுகனை அவளுக்குக் காவலாக நிறுத்திப் பின்னர்ப் போர்க் களத்திற் புகுந்தான். போர்க்களம் புகுந்த காலை தன்னை யெதிர்த்து வரும் மன்னர்களை நோக்கி, "என் வலிமையை யறியாத மன்னர்களே, நுமது மனைவியர், தங்கள் இன்ப வாழ்வை யிழந்து புலம்புவதைத்தான் நீங்கள் விரும்புகின்றீர்களோ? அவ்வாறுயின் நன்று; வாருங்கள். போரினல் கிடைக்கின்ற உணவை விரும்பி யெனது வேலும் மகிழ்வுடன் இருக்கின்றது," என இடி முழக்கம் செய்தான்.

அப்போது மன்னர்கள், "வணிகச் சிறுவனே, நீ வாணிகத்தின் நிலையைத் தெரிந்து கொள்ளாதவனுக இருக்கிறாய். ஒரு வாணிகத்தில் ஈடுபடும்போது அதற்கு இடையூறு உண்டாகுமானுல், இலாபத்தையும் நோக்காது முதலாக வைத்த தொகையை மீட்டுக் கொள்வது வணிகர் தொழில்; ஆகையால் நீ உனது உயிராகிய முதலை மீட்டுக் கொண்டு, இலாபமாக வரும் தத்தையை விட்டுவிடு," என்று கூறினர்.

அவர்களது உரையைக் கேட்ட சீவகன், பின்னும் நகைத்து, "வாணிகத்தின் உண்மையை யறியாத அரசர்களே, தம்முடைய பொருளை மற்றவருக்குக் கொடுத்து அவரது பொருளைப் பெற்றுக் கொள்ளுதல் எங்கள் குலத்தினரது கடமை. எனக்கும் அது பொருத்தமாயுள்ளது. உங்களுக்கெல்லாம் நான் என்னுடைய கூர்மையான அம்பைக் கொடுத்து உங்களது செல்வத்தையும் பெருமையையும் கொள்வேன்.

இப்போரில் உங்களை வெற்றி கொண்டு, தத்தையை மணப்பேன். இன்றேல் மாள்வேன்,'' எனச் சூளுரைத்தான். பின்பு மன்னர்கள் எதிர்க்க, சீவகன் தன் தோழர்களோடு அவர்களை யெதிர்த்தான்.

**சீவகன் தோழர்கள் போர் புரிதல் :**

சீவகனுடைய தோழர்கள் ஆரவாரம் செய்து மிகுந்த மகிழ்ச்சி கொண்டு போர்ச் செயலில் ஈடுபட்டார்கள். அவர்களுள் சிலர், "எம்மோடு எதிர்த்துப் போர் புரியும் ஆற்றல் உடையவர்கள் முன்வருவீர்,'' என முழங்கினர். மற்றும் சிலர், "யானையின் தந்தங்கள் தமது மார்பகங்களைக் கிழித்து அழகு செய்யட்டும்,'' என நினைத்துப் பகைவரது யானைகளை எதிர்த்து நின்றனர். வேறு சிலர், கண்கள் தீயைக் கக்குவனபோல் விழித்து நோக்கித் தங்கள் மேல் சீறி வந்த யானையை வேலினால் தடுத்து நின்றனர். மற்றும் சிலர் பகைவர் மார்பை வேலினால் கிழித்து, அவர்களுடைய குடல்களை அவ்வேலுக்கு மாலையாகச் சூட்டிப் போர்க் கூத்து ஆடினர். வேறு சிலர், "சீவகன் பிறந்த அன்றே பிறந்த எஃகினைப் போன்ற வலிமையான தோள்களையுடைய நூற்றுவராகிய நாங்கள், உங்களது நூறு கோடி வீரர்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கின்றோம். வாருங்கள்,'' என்று கூறினர். இவ்வாறு சீவகன் தோழர்கள் சிங்கமும் புலியும் போலச் சீறிப் பொருதனர்.

தேவதத்தன் என்ற வீரனது குதிரை, குயவனது சக்கரத்தைப் போன்று சுழன்றது. வேற்படை வீரர்களின் கூட்டத்தைப் பிளந்து, மன்னர்கள் அமர்ந்திருந்த யானையின் மீது பாய்ந்து அதன் நெற்றியில்

தனது குளம்பை யழுத்தி மன்னர்களது முடிகளை யெல்லாம் சிதரச் செய்தது.

**புத்திசேனன்** என்பவன் சீவகனுக்கு உற்ற நண்பன். அவ்வீரன் கருமேகம் வானத்திலிருந்து சொரிகின்ற மழையைப் போல அம்புகளைச் சிந்தி, மன்னர்களின் சேனைகளை இயமனுக்கு விருந் தாக்கினான்.

**சீவகனது போர்ச் செயல் :**

இவ்வாறு தன் தோழர்கள் எல்லாரும் போர் புரியும்போது சீவகன் தனது தேரை விரைவாகச் செலுத்தி, மாற்றார் படையை வட்டமாகச் சூழ்ந்து வாட்போர் புரிந்தான். அவனது தேர் உயிரைப் போக்குகின்ற சக்கரத்தைப் போலவும், மேகத்தில் தோன்றுகின்ற மின்னலைப் போலவும் சுற்றிச் சுற்றி வந்தது. அவன், "உங்களை வீணையினால் வென்ற தத்தையின் விழிகளைப் போன்ற இக்கணைகளை ஏற்றுக் கொள்ளுங்கள்," என மன்னர்களுக்கு அம்புகளை அடுக்கடுக்காகக் கொடுத்தான். அவனது அம்பு, மன்னர்களது மார்பைத் துளைத்து, அவர்களது உயிரைக் கவர்ந்தது. மன்னர்கள் தங்கள் படைக் கலங்களை யிழந்து துன்பம் உற்றனர். அறுபட்ட நாணோடு விளங்கிய அவர்களது விற்படைகள், மீன் பிடிக்கும் தூண்டிலைப் போல விளங்கின. சீவகனது வாளினால் தலையை யிழந்து, உதிரம் சொட்டும் யானை களின் உடல்கள், தேனைச் சொரிகின்ற மலையைப் போல விளங்கின. தேர்களில் பூட்டிய குதிரைகள் மாய்ந்ததால், அத்தேர்கள் சிதைந்தன. சீவகன், மன்னர்கள் வெகுண்டு தன் மேல் எறிந்த வேற்படை

களைத் தனது கூர்மையான நுனியையுடைய வேலி ஞல் விலக்கியும், அவர்கள் விடுத்த அம்புகளை வாளி ஞல் சிதைத்தும், அம்மன்னர்களின் சேனைகளைப் பேய்க்கும் நரிகளுக்கும் இரையாக்கினுன்.

" நுங்களை வீணை வென்ற நூபுர அடியி ளுள்தன்
வெங்களித் தடங்கண் கண்டீர் விருந்தெதிர் கொள்மி னென்னு
வங்களி அரசர்க் கெல்லாம் ஓரொன்று மிரண்டு மாகச்
செங்களிப் பகழி யொப்பித் துள்ளவா றூட்டி னுனே."

" நன்மன வேந்தர் தங்கள் நகைமணி மார்பம் நக்கிப்
புன்மன வேந்தர் தங்கள் பொன்னணி கவசம் கீறி
இன்னுயிர் கவர்ந்து தீமை இனிக்கொள்ளு முடம்பி ஞலும்
துன்னல்மின் என்ப வேபோல் சுடுசரம் பரந்த அன்றே!"

இவ்வாறு சீவகனும் அவனது தோழர்களும் புரிந்த போர்ச் செயலைக் கண்டு, அஞ்சிய மன்னர்கள் எஞ்சிய தம்முடைய படைகளை மீட்டுக் கொண்டு ஓடத் தொடங்கினுர். சீவகன் வலம்புரி யென்னும் சங்கை வாயில் வைத்து வெற்றி முழக்கம் செய்தலும், மன் னர்கள் யாவரும், மந்தரம் என்னும் மலையால் கலக்கப் பட்ட பாற்கடல் போலக் கலக்கமுற்று நிலைகுலைந்து ஓடினர்.

சீவகனது வெற்றியை யறிந்த நகர மக்கள் ஆர வாரித்தனர். பின்னர் அவன் போரில் ஈடுபட்டுப் புண் ணுற்ற தன் தோழர்களைக் கண்டு, அவர்களுக்கு வேண்டிய பல உதவிகளும் செய்தான். போரில் ஈடு பட்டதனுல் உண்டாகிய பாவம் தீரத் தன் தோழர் களோடு அருகக் கடவுளை வணங்கினுன்.

பின்பு ஒரு நன்னுளில் இராசமாபுரம் என்னும் அந்நகரம் களிப்புக் கடலில் மூழ்கும்படி, சீவகன் காந்தருவதத்தையை மணம் செய்து கொண்டு இன்ப

மாக வாழ்ந்து வந்தான். அவன் மேலும் பல வீரச் செயல்களைப் புரிந்து இறுதியில் கட்டியங்காரனையும் வென்று, நாட்டைக் கைப்பற்றி இனிதே ஆட்சிபுரிந்து வந்தான்.

இவ்வரலாற்றை யுணர்த்துவது சீவக சிந்தாமணி யென்னும் நூலாகும். தமிழ் மொழியில் சிறப்புற்று விளங்கும் **ஐந்து பெரிய காப்பிய நூல்கள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி** என்பன. இவை **ஐம்பெரும் காப்பியங்கள்** எனப்படும். காவியம் என்னும் வடமொழிச் சொல், தமிழில் காப்பியம் என வழங்கப் படுகின்றது. அது தொடர் நிலைச் செய்யுள் எனவும் கூறப்படும். ஒரு கதைப் பகுதியைப் பல நயங்களும் பொருந்தும்படி சிறப்பாக அமைப்பது 'காப்பியம்' எனப்படும்.

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான **சீவக சிந்தாமணி** யென்னும் இந்நூல் **திருத்தக்க தேவர்** என்ற சமண சமயத்தைச் சார்ந்த முனிவரால் இயற்றப்பட்டது. இவர் சோழர் குடியில் தோன்றி, இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து, தமிழ் இலக்கண இலக்கியங்களில் வல்லவராய் விளங்கினார். இவர் ஒரு முறை மதுரைக்குச் சென்றிருந்த பொழுது அங்குச் சங்கப் புலவர்களைச் சந்தித்து அவர்களோடு அளவளாவினார். அப்போது அவர்கள் திருத்தக்க தேவரை நோக்கி, "சமண முனிவர்கள் துறவறத்தையேயன்றி இன்பம் நிறைந்த இல்லறத்தின் இயல்பை யறிவரோ?" என ஐயங் கொண்டு வினவ, அவர்களது உரையைக் கேட்ட திருத்தக்க தேவர், 'சமண சமயத்தவர் அதனையும் அறிவர்' என்பதை விளக்குவதற்காக வட மொழியில் **ஸ்ரீபுராணத்தில்** உள்ள சீவகனது வரலாற்றைத்

தமிழில் 'சீவக சிந்தாமணி' யென்னும் பெயருடன் சிறப்புடைய காவியமாக இயற்றினர். இவர் இயற்றிய 'நரிவிருத்தம்' என்ற நூல் துறவின் மேன்மையை விளக்குகின்றது. இவரது காலம் கி. பி. பத்தாம் நூற்றுண்டு ஆகும்.

சீவக சிந்தாமணி யென்ற இந்நூல் பதின்மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 3154 செய்யுட்களைக் கொண்டு விளங்குகின்றது. இக்காப்பியம் முழுவதையும் படிக்க இச்சிறு பகுதி தூண்டும் என்பது ஒருதலை.

சென்னை-600 008.

ILAKKIA VAZHIKĀTTI

BY

T. S. UMAPATHY, M.A., L.T.

M. SESHACHALAM & CO.

7, SUNKURAMA CHETTY ST., MADRAS-1

*Copyright*]

*[Price As. 14*